Registered as a Newspaper

# உதயன்

புதன் பொம்மை உள்ளே...

சுடர் : 37
கதிர் : 320

புதன்கிழமை
12 ஒக்ரோபர் 2022

புரட்டாதி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

வடமராட்சியில்

## போதைப்பொருளுடன் மூவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஒக். 12
உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்ன் மற்றும் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் நெல்லியடிப் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 15

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 12
உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னுடன் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சிறப்புக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட கோப்பாய் பொலிஸார் சந்தேகத்துக்கு 15

பொலிஸாரால் தேடப்பட்ட

## போதை வியாபாரி நேற்று சிக்கினார்

யாழ்ப்பாணம், ஒக். 12
யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த நபரொருவர், நீண்டகாலமாக பொலிஸாரால் தேடப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.
5 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோய்னு 15

பிணைமுறி மோசடி வழக்கு

# அர்ஜுன் மகேந்திரனை விடுவித்தது நீதிமன்று!

**கொழும்பு, ஒக்ரோபர் 12**
**இலங்கையில் மட்டுமல்லாமல் சர்வதேச அளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த பிணைமுறி மோசடி வழக்கின் குற்றச்சாட்டு ஒன்றிலிருந்து, மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் உட்பட 10 பிரதிவாதிகளை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.** 15

## நவாலியில் நேற்று குண்டுகள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 12
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலி - அட்டகிரிப் பகுதியிலுள்ள காணி ஒன்றிலிருந்து ஏராளமான வெடிகுண்டு 15

## எரிவாயுவின் விலையை லாப்ஸும் குறைத்தது

கொழும்பு, ஒக். 12
லாப்ஸ் எரிவாயு நிறுவனமும்எரிவாயுசிலிண்டர்களின் விலையைக் குறைத் 15

## வீதியால் சென்ற பெண்களிடம் வல்லை வெளியில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஒக். 12
வடமராட்சி - வல்லைவெளிப்பகுதியில் வீதியால் சென்ற மூன்று பெண்களிடம் பெருமளவு நகைகள் நேற்று கத்திமுனையில் கொள்ளையிடப்பட்டுள்ளன.
மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரண்டு பெண்களை வழிமறித்த இருவர் கழுத்தில் கத்தியை வைத்து அவர்கள் அணிந்திருந்த இரண்டரைப் பவுண் மற்றும் இரண்டு பவுண் தங்கச் 15

## உடனடி நிவாரணங்கள் இலங்கைக்குத் தேவை

ஐ.நா. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 12
ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்படி, கடுமையான கடன் நெருக்கடி காரணமாக உடனடி நிவாரணம் வழங்கப்பட வேண்டிய 5 நாடுகளில் இலங்கையும் உள்ளது. 15

வாள்வெட்டு

## சிகிச்சை பயனின்றி இளைஞன் சாவு!

கிளிநொச்சி, ஒக். 12
கிளிநொச்சி ஏ-9 வீதியில் கடந்த 6ஆம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் காயமடைந்த ஜெயசீலன் (வயது - 33) என்ற நபர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். 15

## இளைஞர் மீது வாள்வெட்டு நவாலி வடக்கில் கொடூரம்!

யாழ்ப்பாணம், ஒக். 12
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலி வடக்குப் பகுதியில் நேற்று இரவு இளைஞர் ஒருவர் மீது வாள்வெட்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
வீடொன்றின் முன்னால் நின்ற இளை 15

## ஆனந்தபுரம் பகுதியில் மனித எச்சங்கள் மீட்பு

முல்லைத்தீவு, ஒக். 12
புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் காணி ஒன்றிலிருந்து மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.
இறுதிக்கட்ட போர் நடவடிக்கையின்போது உக்கிரப் போர் நடைபெற்ற இடமாக ஆனந்தபுரம் காணப்படுகின்றது. இந்த நிலையில் ஆனந்தபுரம் கிருஷ்ணர் கோவிலுக்கு அருகில் 15







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# போதிய எரிபொருள் கையிருப்பு இனிமேல் இல்லை தட்டுப்பாடு

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தகவல்

**கொழும்பு, ஒக். 12**

**ஒன்றரை மாதத்துக்குத் தேவையான போதியளவு எரிபொருள் கையிருப்பிலுள்ளது. இதனால் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சாத்தியங்கள் இல்லை என பெற்றோலிய வளக்கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.**

நேற்றுமுன்தினம் நாட்டுக்கு வருகை தந்துள்ள கப்பலிலிருந்து இறக்கப்பட்டுள்ள சுமார் 40 ஆயிரம் மெற்றிக் தொன் எடையுடைய டீசலுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் இரண்டு டீசல் மற்றும் பெற்றோல் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன. அத்துடன் இந்தியன் ஒயில் நிறுவனமும் எரிபொருள் விநியோக இறக்குமதி செய்து வருகிறது.

எனவே, நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய சாத்தியங்கள் கிடையாது என பெற்றோலிய வளக்கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

(ச-இ)

# சொல்ஹெய்ம் வருகையில் பின்னணி எதுவும் இல்லை!

## அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.12

ஐ.நா. சுற்றாடல் வேலைத்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எரிக் சொல்ஹெய்மின் இலங்கை வருகையின் பின்னணியில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் நிகழ்ச்சி நிரல் உள்ளது என்று முன்வைக்கப்படும் கருத்துகளை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் எரிக் சொல்ஹெய்மின் இலங்கைக்கான திடீர் பயணம் 'டயஸ்போராக்களின்' தேவையை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடா? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன, "வெளிநாட்டு இராஜதந்திரிகளின் இலங்கை பயணம் தொடர்பாக அச்சம் கொள்ள வேண்டியதில்லை. அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன், அணிசேராக் கொள்கையின் அடிப்படையிலேயே இலங்கை பயணிக்கின்றது. ஒரு சுயாதீன நாடாக, பிறிதொரு நாட்டின் அழுத்தங்களுக்கு எமது நாடு அடிபணியாது - என்றார்.

(எ-44)

# உள்ளூராட்சி உறுப்பினர்கள் குறைப்புக்கு சு. கட்சி ஆதரவு

## மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவு வழங்கும்.

குறித்த யோசனை தொடர்பில் சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடு குறித்து கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8ஆயிரத்திலிருந்து 4 ஆயிரம் வரை குறைக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

நான் ஜனாதிபதியாக இருக்கும்போது உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் சட்டவரைவு வந்தபோது, அதற்கு உடன்படவில்லை. எனினும் தற்போதாவது அந்த முடிவு தவறு என கருதி மாற்றம் மேற்கொள்ளப் படுவது சிறந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த எண்ணிக்கை குறைப்பு நகர்வு தேர்தலைப் பிற்போடும் தந்திரம் என டலஸ் ஆதரவு அணி குற்றஞ்சாட்டியுள்ளது.

(ச-44)

# 1.8 பில்லியன் டொலரே தற்போது கையிருப்பில்

கொழும்பு, ஒக். 12

தற்போது 1.8 பில்லியன் டொலரே கையிருப்பில் உள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதுள்ள டொலர் கையிருப்பில் இருந்து பயன்படுத்தக்கூடிய தொகை 300 மில்லியன் டொலர் மட்டுமேயாகும். இன்று எம்மிடம் உள்ள டொலர் கையிருப்பு 1.8 பில்லியன் டொலராகும். 2018 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 925 மில்லியன் டொலராக இருந்த சுற்றுலா வருமானம் 2021 ஆம் ஆண்டில் 682 மில்லியன் டொலராகக் குறைந்துள்ளது. அத்துடன் இந்த வருடம் ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையில் சுற்றுலா வருமானம் 893 மில்லியன் டொலரை எட்டியுள்ளது - என்றார்.

(எ-14)



சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தினரால் நேற்றுமுன்தினம் பொதுமக்களுக்கு குளிர்பானம் வழங்கப்பட்டது.

(எ-17)

# சாரதி அனுமதிப்பத்திரம்; கட்டணம் உயர்வு

கொழும்பு, ஒக். 12

புதிதாக சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான கட்டணங்கள், சாரதி அனுமதிப்பத்திரம் இருந்தால் அதைப் புதுப்பித்தல் அல்லது செல்லுபடியாகும் காலத்தை நீடித்தல் போன்றவற்றுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்த்தன, வர்த்தமானி மூலம் சாதாரண மற்றும் ஒரே நாள் சேவையின் கீழ்வரும் சாரதி அனுமதிப்பத்திர கட்டணங்களை திருத்தியமைத்துள்ளார்.

அதன்படி, ஒரு வகுப்புக்கான கற்றல் அனுமதி மற்றும் புதிய சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பக் கட்டணம், சாதாரண சேவையின் கீழ் 2 ஆயிரத்து 500 ரூபாவும் ஒரு நாள் சேவையின் கீழ் 3 ஆயிரத்து 500 ரூபாவும் ஒரே நேரத்தில் இரண்டு வகுப்புகளுக்கு சாதாரண சேவையின் கீழ்க் கட்டணம் 3 ஆயிரம் ரூபா மற்றும் ஒரே நாள் சேவைக்கு 4 ஆயிரம் ரூபாவுமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாகன வகுப்புகளுக்கு, சாதாரண சேவைகளின் கீழ் கட்டணம் 3 ஆயிரத்து 500 ரூபாவும் ஒரு நாள் சேவையின் கீழ் 4 ஆயிரத்து 500 ரூபாவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மோட்டார் போக்குவரத்து திணைக்களம் ஒரு வாகனத்துக்கு சாரதி அனுமதிப்பத்திர நடைமுறைத் தேர்வுக்கு மீண்டும் விண்ணப்பிக்க ஆயிரம் ரூபாவும் அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-14)

# தொலைபேசிக் கட்டண உயர்வு: சட்டமா அதிபரிடம் ஆலோசனை

கொழும்பு, ஒக். 12

தொலைத்தொடர்பு நிறுவனங்களின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அதிகரிப்புக்கமைய கடந்த 5 ஆம் திகதி முதல் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மீண்டும் தமது கட்டணங்களை அதிகரித்தன.

கட்டண அதிகரிப்புக்கு தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு அண்மையில் தெரிவித்தது.

இந்த நிலையில் கட்டண அதிகரிப்பு தொடர்பில் தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவில் அந்த நிறுவனங்களால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களுக்கு அமைய சட்டமா அதிபரின் ஆலோசனை பெற தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

(ச-இ)

# கச்சா எண்ணெய் கப்பலுக்கு தாமதக்கட்டணம் ரூ.110 கோடி

கொழும்பு, ஒக். 12

கடந்த 20 நாள்களாகக் கொழும்பு துறைமுகத்துக்கு அருகிலுள்ள கடலில் நங்கூரமிட்டுள்ள கச்சா எண்ணெய்க் கப்பலின் தாமதக் கட்டணம் 110 கோடி ரூபாவாகும் என்று எரிசக்தி அமைச்சின் அதிகாரி ஒருவர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அதிகாரி மேலும் தெரித்துள்ளதாவது:-

99 ஆயிரம் மெற்றிக்தொன் கச்சா எண்ணெய்க் கப்பல் ஒன்று கடந்த செப்ரெம்பர் 20 ஆம் திகதி நாட்டை வந்தடைந்தது.

டொலர் இல்லாமையால் கப்பல் கடந்த 20 நாள்களாக கொழும்பு துறைமுகத்துக்கு அருகிலுள்ள கடலில் நங்கூரமிட்டுள்ளது. கப்பல் நங்கூரமிட்ட ஒரு நாளுக்கு தாமதக் கட்டணமாக ஒன்றரை லட்சம் டொலர் செலுத்த வேண்டும்.

அதன்படி, கப்பலின் தாமதக் கட்டணமாக 30 லட்சம் டொலர் அதாவது 110 கோடி ரூபா செலுத்த வேண்டும்.

இந்த நிலையில் எண்ணெய்க் கப்பலை விடுவிப்பது தொடர்பில் நிதியமைச்சு மற்றும் திறைசேரியுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது - என்றார்.

(எ-14)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்ப கொடுப்பனவை அதிகரிக்க அனுமதி

கொழும்பு, ஒக்.12
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தின ருக்கு ஒரு தடவை மாத்திரம் வழங்கப்படுகின்ற ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவை 2 லட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனு மதி வழங்கியுள்ளது.

அத்துடன், ஆளொருவர் காணாமல் ஆக்கப் பட்டுள்ளார் என இழப்பீட்டு அலுவலகம் உறு திப்படுத்துகின்றதெனில், உதவித் தொகையை பெறுவதற்கு 'காணாமல் ஆக்கப்பட்டமைக்கான சான்றிதழ்' அவசியமில்லை எனவும் அமைச் சரவை தீர்மானித்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. அதிலேயே நீதி அமைச்சர் விஜ யதாச ராஜபக்ச மேற்படி அமைச்சரவைப் பத்தி ரத்தை முன்வைத்து, அதற்கு அனுமதி பெற் றுள்ளார்.

"பதிவாளர் நாயகத்தால் வழங்கப்படும் காணா மல் போனமைக்கான சான்றிதழை அடிப்படை யாகக் கொண்டு காணாமல்போன ஆளொரு வரின் நெருங்கிய உறவினருக்கு ஒரு லட்சம் ரூபா தொகையை செலுத்துவதற்காக 2022.03.14 அன்று நடைபெற்ற அமைச்சர வைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், காணாமல் போனமைக்கான சான் றிதழை பெறுவதற்கு நீண்டகாலம் எடுப்பதால், ஆளொருவர் காணாமல் போயுள்ளமையை இழப்பீட்டு அலுவலகம் உறுதிப்படுத்தப்பட்டிருப் பின், காணாமல் போனமைக்கான சான்றித ழைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையை நீக்குவதற்கும், செலுத்தப்படும் தொகையை 2 லட்சமாக்குவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது." என அமைச்சரவைப் பத்திரத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-44)

# தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சிக்கிறது அரசாங்கம்

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

**கொழும்பு, ஒக். 12**

**தேர்தல் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழுக் களை நியமித்தல் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துதல் போன்றவற்றின் ஊடாக அரசாங்கம் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு முயற்சிக்கின்றது என பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.**

PAFFREL

இது தொடர்பில் பவ்ரல் அமைப் பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித் ததாவது:

தேர்தல் முறையில் திருத்தம், புதிய தேர்தல் முறை அறிமுகம் ஆகிய வற்றை அரசாங்கம் தொடர்ச்சி யாக மேற்கொண்டு தேர்தலை காலம் தாழ்த்துகின்றது.

கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இதற்கென பல குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. பல மில்லியன் ரூபா இதற்காக செலவிடப்பட்ட போதிலும் எவ்வித பயனும் கிடைக்கப்பெறவில்லை. சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவ தற்கு நிதி வசதி இருந்தால் ஏன் தேர்தல் நடத்தப்படமுடியாது?

எனினும் தேர்தலில் செலவு செய் யும் நிதி குறித்த உத்தேச சட்டம் உள்ளிட்ட பல்வேறு புதிய சட்டப் பரிந்துரைகளை வரவேற்கிறோம் - என்றார். (ச-இ)

## 22ஆவது திருத்தத்தின் ஊடாக பிரிவினைவாதம் தலைதூக்கும்

### சாகர காரியவசம் கூறுகின்றார்

கொழும்பு, ஒக். 12
அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி யின் அதிகாரங்கள் வரையறுக் கப்பட்டால் நாட்டில் மீண்டும் பிரிவினைவாதம் தலைதூக்கும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலா ளர் சாகர காரியவசம் தெரிவித் தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்றுமுன்தி னம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக் கையில் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அவர் மேலும் தெரிவித் ததாவது:-

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் அவதானம் செலுத் தப்படுவதை விடுத்து தற்போ தைய அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் தொடர்பில் அதிக கவ னம் செலுத்தப்படுகின்றது. 19 ஆவது திருத்தத்தில் நாடாளுமன் றத்துக்கும், நிறைவேற்று அதிகா ரத்துக்கும் முரண்பாட்டைத் தோற்றுவித்ததை போன்று 22 ஆவது திருத்தத்திலும் இவ்விரு பிரதானதுறைகளுக்குமிடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்க குறுகிய தரப்பால் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்க மைய அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் ஊடாக நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டால் நாட்டில் மீண்டும் பிரிவினைவாதம் தலை தூக்கும்.

ஆகவே, அரசமைப்புத் திருத்தம் அவசியமற்றது. புதிய அரச மைப்பை உருவாக்க முழுமை யான ஒத்துழைப்பு வழங்கு வோம். புதிய அரசமைப்புத் தொடர்பில் ஜனாதிபதி சட்டத்த ரணி ரொமேஷ் டி சில்வா தலை மையிலான குழுவின் அறிக் கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதியமைச்சிடம் வலியுறுத்தி யுள்ளோம் - என்றார். (எ-14)

## சம்பிக்கவின் பயணத்தடை நீக்கம்

கொழும்பு, ஒக். 12
கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரண வக்கவுக்கு விதிக்கப்பட்ட பயணத்த டையை கொழும்பு மேல் நீதிமன்றம் இடைநிறுத்தியுள்ளது.

இராஜகிரிய வாகன விபத்து தொடர் பான வழக்கில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை யின் ஒரு பகுதியாக நீதிமன்றத்தால் சம்பிக்க ரணவக்கவின் கடவுச்சீட்டு முடக்கப்பட்டு பயணத்தடை விதிக்கப் பட்டிருந்தது.

சம்பிக்க ரணவக்க சார்பில் முன்னி லையான ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன, அடுத்த விசாரணை திகதி வரையில் தமது கட்சிக்கார ருக்கு வெளிநாடு செல்ல அனும திக்க வேண்டும் என்று கோரினார்.

அதற்கமைய சம்பிக்க ரணவக்க வுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை அடுத்த வருடம் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு உயர் நீதிமன்ற நீதிபதி தமித் தோட்டவத்த உத்தரவிட்டார். (எ-14)

## மே 9 வன்முறைகளுக்கு மஹிந்தவே காரணம்!

### டிலான் பெரேரா எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 12
கடந்த மே மாதம் 9 ஆம் திகதிக்கு முன் னர் மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியிலி ருந்து விலகியிருந் தால் நாட்டில் வன் முறை தோற்றம் பெற் றிருக்காது என்று நாடாளுமன்ற உறுப் பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மே 9 ஆம் திகதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்குவதாக குறிப்பிட்டுக்கொண்டு அலரிமாளிகை யில் ஒன்று கூடியவர்கள் காலிமுகத்திடல் போராட்ட களத்துக்குள் புகுந்து தாக்குதலை நடத்தினர்.

அதனால் நாடு முழுவதும் கலவர பூமியாகியது. அதன் பின்னரே மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவி யிலிருந்து விலகினார். எனினும் மே 9ஆம் திகதி காலை அல்லது அதற்கு முன்னர் மஹிந்த பதவி விலகியிருந்தால் எந்தப் பிரச்சினையும் நாட்டில் தோற்றம் பெற்றிருக்காது.

மஹிந்த ராஜபக்சவை மே 9 இல் தவறாக வழி நடத்தியவர்கள் தற்போது மீண்டும் அவரை மேடைக்கு ஏற்றி நாட்டு மக்களை தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றார்கள். களுத்துறையில் இருந்து அதற்கான பயணத்தை தற்போது ஆரம்பித்துள்ள னர் - என்றார். (எ-14)

## தேர்தலை நடத்தாவிட்டால் போராட்டம் நடத்துவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆவேசம்

இந்த முட்டாள்தனமான அரசாங் கம் நாட்டை அழித்து வருகின்றது. தேர்தலுக்கு முற்றாக அஞ்சுகின் றது. தேர்தலைப் பிற்போடவே முயற்சிக்கின்றது. தேர்தல் ஒன்று இல்லாமல் முன்னேற்றம் ஒன்று இல்லை. அரசாங்கம் தேர்தலை நடத்தாவிட்டால் வீதியில் இறங்கி அதற்காகப் போராடுவோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி யின் உடுதும்பர தேர்தல் தொகு திக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைதியான போராட்டங்களைக் கண்டும் அரசாங்கம் அச்சமடை கின்றது. காலிமுகத்திடல் வளாகத் தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைதியான முறையில் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அடக்குமுறை மேற்கொள் ளப்பட்டதும் இதன் பிரகாரமே. தாயும் மகனும் கைகோர்த்து நடத் தும் அமைதியான ஆர்ப்பாட்டத் தைக்கூட அரசால் பொறுத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட் டுள்ளது. மகனிடமிருந்து தாயைப் பறித்துச் சென்று ஏற்றிச் செல்லும் காட்சிகளைக் கூடப் பார்க்கக் கிடைத்தது.

அமைதியான போராட்டங்களில் ஈடுபடும் அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இழப்பீடு வழங்க வேண்டிவரும். உடனடியாக தேர்தல் ஒன்றை நடத்துமாறு அரசாங்கத்துக்குச் சவால் விடுக்கின்றேன். முடிந்தால் ஜனாதிபதித் தேர்தலையும் நடத் துங்கள். தேர்தலை ஒத்திவைக்கப் பல்வேறு சூழ்ச்சிகளைப் பயன்ப டுத்துவதை விடுத்து, முடிந்தால் 'மொட்டு' விரும்பும் எந்தத் தேர்த லையும் நடத்துங்கள் - என்றார். (எ-14,22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களின் கடிதங்களுக்கு உடனடியாகப் பதிலளிக்கவேண்டும்

## அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, ஒக்.12

**அரச நிறுவனங்களுக்கு பொதுமக்கள் அனுப்பும் கடிதங்கள், மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கும் செயன்முறையை வினைத்திறனுடன் முன்னெடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.**

பொதுமக்கள் தமது வேலைகளை நிறைவு செய்து கொள்வதற்காக சிரமங்களுக்கு மத்தியில் நேரம் மற்றும் பணத்தை செலவழித்து அரச நிறுவனங்களுக்கு வருகின்றனர். இதற்குப் பதிலாக, அந்த நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு உடனடி பதிலை வழங்கும் வினைத்திறனான செயன்முறையை முன்னெடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள், மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிப்பது தொடர்பான விதிமுறைகள் அடங்கிய, பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடனான விசேட கடிதம், அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்களுக்கு பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் சாதாரண கடிதங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்கவும் இதன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உடனடி பதில் வழங்க முடியாத சந்தர்ப்பங்களில், குறைந்த பட்சம் ஒரு வாரத்துக்குள் இடைக்கால பதில் ஒன்றை வழங்குவதற்கும், 4 வாரங்களுக்குள் இதற்கான இறுதிப் பதிலை அனுப்புவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அனைத்து உத்தியோகபூர்வ கடிதங்களுக்கும் பதிலளிக்கும்போது அந்தக் கடிதத்தில் இடப்படும் கையொப்பத்துக்கு கீழ், அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்துடன் தொடர்புடைய பிரதானியின் நேரடி தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பன குறிப்பிடப்பட வேண்டும் என்றும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

# இன, மத முறுகலை உண்டாக்குவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே!

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெற்றுவரும் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.க்கள் ஏதாவதொரு நாடகத்தை உருவாக்கி மக்கள் மத்தியில் இன,மத முறுகல்களை ஏற்படுத்துகின்றனர்.

இவ்வாறு முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் அண்மையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் முன்வைத்த கருத்தைத் தொடர்ந்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலை விகாரை என்பது இந்த நாட்டின் வரலாற்று விகாரையாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏதேனும் பௌத்த வழிபாட்டிடம் இருந்தால் அதற்குப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர், இடையூறுகளை விளைவிக்கின்றனர்.

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் நடைபெறும் காலங்களில், ஏதாவது ஒரு நாடகத்தைக் காட்டி இன, மத முறுகல்களை ஏற் படுத்துகின்றனர். தென்பகுதியிலுள்ள எந்தவொரு இந்து ஆலயம் தொடர்பிலும் எவராவது எதனைக் கூறுகின்றனரா? அல்லது பிரச்சினைகளை உண்டுபண்ணுகிறார்களா? - என்றார். (ச-22)

# பெரமுனவிலிருந்து டலஸ் அணிக்கு தாவும் எம்.பிக்கள்!

கொழும்பு, ஒக். 12

டலஸ் அழகப்பெரும தலைமையில் இயங்கும் சுயாதீன எம்.பிக்கள் குழுவில் பொதுஜன பெரமுனவின் மேலும் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணையவுள்ளனர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜீ.எல்.பீரிஸின் இல்லத்துக்குக் கடந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று சென்றிருந்தது. அநுர பிரியதர்சன யாப்பா, பிரியங்கர ஜயரத்ன, சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே, ஜயரத்ன ஹேரத், சந்திம வீரக்கொடி, ஜோன் செனவிரட்ன ஆகியோர் இந்தக் குழுவில் இருந்தனர். இவர்களுடன், டலஸ் அழகப்பெரும, சரித் ஹேரத், நாலக கொடஹேவா, டிலான் பெரேரா ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்தினர். சந்திப்பின் நிறைவில், இரு தரப்பினரும் ஒருமித்த நிலைப்பாட்டுடன் செயற்பட உடன்பட்டனர் என்று தெரியவந்துள்ளது. (ம)

# சர்வகட்சி ஆட்சி அமைந்திருந்தால் நெருக்கடிக்கு தீர்வு கிட்டியிருக்கும்

## மைத்திரி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 12

சர்வகட்சி அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்குமாயின் பல நாடுகளின் உதவி எமக்குக் கிடைத்திருக்கும். நாட்டை தற்போதைய நிலையிலிருந்து மீட்டிருக்க முடியும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதைய பல பிரச்சினைகளுக்கு மத்தியில், நாட்டை ஜனநாயக ரீதியாகக் கொண்டு செல்வதே தற்போது தேவையாக உள்ளது. பசி, உணவின்மை, விவசாயப் பிரச்சினை, மருந்துத் தட்டுப்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. மருத்துவர்கள் பலர் தற்போது நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். சுகாதாரத்துறை பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது.

பணம் இன்மையால், மேலதிக வகுப்புக்களுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இவ்வாறான பல பிரச்சினைகள் காணப்படுகின்ற நிலையில், நாடு என்ற ரீதியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் எம்மிடையே பேதங்கள் காணப்படுவது பொருத்தமற்றது.

எனினும், மக்களின் பக்கம் நின்று அவர்களின் குரல்களுக்கு செவிமடுத்து செயற்படுவது அவசியமாகும். நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கும் மக்களின் நலன்களுக்காக மேற்கொள்ளப்படும் தீர்மாணங்களுக்கும் எம்மால் ஒத்துழைப்பு வழங்கப்படும் - என்றார். (எ-14,22)

# கொதித்த குழம்பில் வீழ்ந்து கைதிசாவு!



கொழும்பு, ஒக். 12

அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள சிறைச்சாலையொன்றில் கொதி நிலையில் இருந்த குழம்பில் வீழ்ந்த கைதி கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

சிறையின் சமையலறையில் பணியில் ஈடுபட்டிருந்தவேளை கால்தடுமாறி அவர் குழம்பில் வீழ்ந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்து படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் உயிரிழந்தார். (ச-இ)

# ஜெனிவாவில் இலங்கை ஆதரவை இழந்துள்ளது

## நாட்டுக்கு அவமானம் என்று ரவூப் ஹக்கீம் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 12

ஜெனிவா தீர்மானம் தொடர்பில் கடந்த காலங்களில் இலங்கைக்கு ஆதரவாக இருந்த நாடுகளும் இந்த முறை நடுநிலை வகித்திருக்கின்றமை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எமது நாட்டுக்கு ஏற்பட்ட தோல்வி மட்டுமல்ல, அவமானத்துக்கும் உரியது' இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இதற்கு முன்னர் எமது நாட்டுக்கு எதிராகத் தீர்மானம் வந்தபோது, 11 நாடுகள் ஆதரவாக வாக்களித்திருந்தன. ஆனால், இந்த முறை அது 7ஆகக் குறைவடைந்துள்ளது. கடந்த காலங்களில் எமக்கு ஆதரவாக இருந்த நாடுகளும் நடுநிலை வகித்திருக்கின்றமை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எமது நாட்டுக்கு ஏற்பட்ட தோல்வி மட்டுமல்ல அவமானமும் ஆகும்.

அதுமட்டுமன்றி இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியத்தின் மூலம் எமக்குச் சாதகமான பதில் கிடைக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தார்.

ஆனால், அவ்வாறான எந்தச் சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. மேலும், ஜெனிவாவில் எமது நாட்டுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் பொருளாதார மோசடிக் குற்றச்சாட்டு முதல் தடவையாகக் கொண்டு வரப்பட்டதாகும். எமது நடவடிக்கை காரணமாகவே நாங்கள் தேவையில்லாத பிரச்சினைக்குள் சிக்கி இருக்கின்றோம். புனர்வாழ்வுச் சட்டமூலம் பயங்கரவாதத் தடைச் சட்டம், இனவாதச் செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் எமது நாட்டுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களாகவுள்ளன - என்றார். (ம-14-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பாதாளம்வரை பாயும் பணம்

பிணை முறி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் உட்பட 10 பேர் அந்த வழக்கில் ஒரு குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். பிணைமுறி மோசடியால் பல மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், இவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றார் கள். 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27 ஆம் திகதி இடம்பெற்ற மத்திய வங்கியின் பிணை முறிகள் ஏலத்தின் மூலம் அரசாங்கத்துக்கு 688 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டமை தொடர்பாகவே இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவர்களின் மீது 23 வழக்குகள் தொடரப்பட்டிருந்த நிலையில், ஒரு குற்றச்சாட்டில் இருந்து இப்போது அவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

இலங்கை வரலாற்றில் இல்லாத பெரும் பொருளாதாரச் சரிவை தற்போது சந்தித்திருக்கின்றது. பொருளாதார நெருக்கடியால் மக்கள் அன்றாட வாழ்வைக் கொண்டு நகர்த்த முடியாது தவிக்கின்றனர். கடந்த காலங்களில் ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் முன்யோசனையற்றுச் செயற்பட்டதன் விளைவுகளையே இப்போது நாடு எதிர்கொண்டிருக்கின்றது. சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும்கூட இதைப் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றன. அந்தவகையில் பார்த்தால், நாட்டினதும், மக்களினதும் இப்போதைய அவலத்துக்கு அர்ஜூன் மகேந்திரன் போன்றோரும் காரணமே. நாட்டை சரிவுக்குள் தள்ளிய பொருளாதாரக் குற்றவாளிகளே இவர்கள்.

கடந்த அரசாங்கங்களில் இருந்தவர்கள் மேற்கொண்ட ஊழல்கள் நாட்டின் பொருளாதாரச் சரிவுக்கு மிக முக்கியமான காரணமாகும். கடந்த காலங்களில் பல்வேறு ஊழல்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகியிருந்த போதும், அவற்றுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படுவது இலங்கையில் குதிரைக் கொம்பாகவே இருக்கின்றது. தண்டனையில்லாத நிலையில் காலம் காலமாக நடந்தேறிய ஊழல்கள் தற்போது மக்களின் தலைகளில் வந்து விழுந்திருக்கின்றன.

ஆட்சியில் மாறிமாறி அமர்வோர் மக்களை ஏமாற்றுவதற்காக விசாரணை நாடகங்களை அரங்கேற்றினாலும், திரைமறைவில் ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசையாகவே இருந்து கொள்கின்றனர். ஒவ்வொரு தரப்பும் ஆட்சிக்கு வந்ததும் எதிர்த்தரப்பின் ஊழல்கள் தொடர்பில் விசாரணைகளை முடுக்கி விடுவது போன்று “பாவ்லா” காட்டுவதும், சிறிது காலத்தின் பின்னர் அவை கிடப்பில் போடப்பட்டு மறக்கடிக்கப்படுவதும் வழமையாகி விட்டிருக்கின்றது. இந்த நிலைமையும் மக்களின் கேள்வி எழுப்பாத தன்மையுமே இப்போது நாட்டின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியிருக்கின்றன.

கடந்தகாலப் படிப்பினைகளைக்கொண்டு, முன்னகர்ந்து, நாட்டை இக்கட்டில் இருந்து மீட்க வேண்டிய தருணத்திலும் கூட, அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் தங்கள் ஊழல்களை மறைத்து, ஒருவரை ஒருவர் காப்பாற்றிக் கொள்ளும் அசிங்க அரசியலையே முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமை மாறி நாட்டில் நடந்த ஊழல்கள் வெளிக்கொணரப்பட்டு, குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவானால் மட்டுமே நாடு முன்னேற்றகரமான திசையில் பயணிக்க முடியும்.

அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதால் அரசியல்வாதிகள் ஒருவரை ஒருவர் ஒருபோதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. அவர்களிடத்தில் இந்த மாற்றம் தானாக ஏற்படும் என்று எதிர்பார்ப்பது மடமை. நாட்டு மக்கள் கேள்வி எழுப்பினால் மட்டுமே இந்த மாற்றம் ஏற்படும். வெறுமனே ஆட்சியாளர்களை மாற்றுவதால் நாட்டில் எதுவும் நடந்துவிடப்போவதில்லை. நாட்டில் ஏற்பட வேண்டிய உண்மையான மாற்றம் என்ன என்பதை மக்கள் புரிந்துகொண்டு அதற்குரிய பாதையில் விரைவாகப் பயணிப்பது அவசியம். அவ்வாறு நடந்தால் மட்டுமே எமது எதிர்காலச் சந்ததிக்கு ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கமுடியும். இல்லையேல் இப்போதுபோல் எப்போதும் பணம் பாதாளம் மட்டும் பாய்ந்துகொண்டே இருக்கும்.

### நாளொரு நல்வார்த்தை

“நமக்கு எதையெல்லாம் பிறர் செய்யக்கூடாது என்று நினைக்கிறோமோ, அதையெல்லாம் நாம் பிறருக்குச் செய்யக் கூடாது”

- கன்பூசியஸ்




# அடுத்த ஆண்டு கடும் பொருளாதார மந்தம்!

## உலக வங்கி, நாணய நிதியம் எச்சரிக்கை

**கொழும்பு, ஒக்.12**

**அடுத்த ஆண்டு உலகப் பொருளாதாரம் கடுமையான மந்தநிலை அடையும் அபாயம் உள்ளது என்று உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பன தெரிவித்துள்ளன.**

அமெரிக்கா - வொஷிங்டனில் நடைபெறும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் 2022ஆம் ஆண்டுகூட்டுமாநாட்டில் வைத்தே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அபாயத்தால் உலகின் பல நாடுகள் பொருளாதாரச் சிக்கல்களை சந்திக்க நேரிடும் - என்றும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

வளர்ந்த நாடுகளின் பொருளாதாரத்தில் ஏற்படும் மந்தநிலை மற்றும் விரைவான பணவீக்கம் வளரும் நாடுகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பன எச்சரித்துள்ளன.

அடுத்த ஆண்டு உலகப் பொருளாதாரம் கணிசமான அளவு வீழ்ச்சியடையும் ஆபத்து உள்ளது என்று உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பஸ் தெரிவித்துள்ளார். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கடன் சுமையும் அதிகரிக்கலாம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த பொருளாதார மந்தநிலையின் தாக்கத்தை உலகின் வலிமையான பொருளாதாரங்களும் உணரும் என சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டினா ஜோர்ஜீயேவா கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கணக்கீடுகளின்படி, இந்த ஆண்டு உலகப் பொருளாதாரத்தில் மூன்றில் ஒரு பங்கு கடும் வீழ்ச்சியடைய அதிக ஆபத்து உள்ளது. அடுத்த ஆண்டு தொடர்ந்து இரண்டு காலாண்டுகளுக்கு பொருளாதார வளர்ச்சி குறைய வாய்ப்பு உள்ளது என கணிக்கப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டுக்குள் உலக உற்பத்திப் பொருளாதாரம் 4 டிரில்லியன் டொலரை இழக்கும். சர்வதேச நாணய நிதியத்தின் தரவுகளின்படி, நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் கொடுப்பனவு சமநிலையில் 9 பில்லியன் அமெரிக்க டொலர் பற்றாக்குறை ஏற்படும் என மேலும் கணிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையை சமாளிக்கும் திட்டங்கள் போதுமானதாக இல்லாவிட்டால் உலகம் நெருக்கடியின் விளிம்பில் நிற்கும் என சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டினா தெரிவித்துள்ளார்.

(எ-இ)

# வறுமை நாடாக மாற்ற அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக். 12

நிதி உதவிகள், கடன்கள் மற்றும் சலுகைகளை அதிக அளவில் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இலங்கையை குறைந்த வருமானம் பெறும் நாடாக தரமிறக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும், ஊடக சந்திப்பில் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாடு, ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்கு உதவும், உலக வங்கியின் சலுகை நிதியைப் பெறுவதற்காகவே இவ்வாறு குறைந்த வருமானம் கொண்ட நாடாக இலங்கை வகைப் படுத்தப்பட்டுள்ளது.

(எ)

**நாளை** 13.10.2022 வியாக்கிழமை புரட்டாதி - 26

சுபநேரம் : 07.32 - 09.02
ராகுகாலம்: 12.32 - 03.02
சங்கடஹர சதுர்த்தி, கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கசிப்பு காய்ச்சிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 12

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டைப் பகுதியில் கசிப்பு மற்றும் கோடா ஆகியவற்றுடன் அதேபகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் கசிப்பு காய்ச்சப்படுகிறது என மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்த இடம் முற்றுகையிடப்பட்டது.

அங்கிருந்து 20 லீற்றர் கசிப்பு, கோடா மற்றும் அவற்றுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கசிப்பு காய்ச்சிய குற்றச்சாட்டில் அதேபகுதியைச் சேர்ந்த 41 வயதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், விசாரணைகளின் பின் அவர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ச-125)

## கால்நடைகளை கட்டி வளர்க்கவும்

சாவகச்சேரி ஒக்.12

தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை ஆரம்பித்துள்ளதால் மறு அறிவித்தல்வரை கால்நடை வளர்ப்போர் தமது வளர்ப்பு கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும் என்று கமக்கார அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

வயல்களில் நெற்செய்கை அறுவடை தீவிரமாக நடந்துவரும் நிலையில், கால்நடைகளை வளர்ப்போர் கால்நடைகளைக் கட்டி வளர்த்து ஒத்துழைக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ய-9)

## உர விநியோகம்

சாவகச்சேரி ஒக்.12

தென்மராட்சி தெற்கு கோயிலாக்கண்டி கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை யூரியா உரம் விநியோகிக்கப்படவுள்ளது.

விவசாயிகள் இந்த வருடத்துக்கான ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு, சந்தாப்பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டையின் புகைப்படப்பிரதி ஆகியவற்றுடன் வந்து உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

# வடமாகாணத்தின் முன்னேற்றத்துக்கு பட்டதாரிகளின் பங்களிப்புத் தேவை!

### வடமாகாண பிரதம செயலாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 12

**இன்றைய இளையோர் நாளைய தலைவர்கள் எனும் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் கல்விகற்று உயர்பட்டப்படிப்புகளை முடித்தவர்கள் கட்டாயம் வடக்கு மாகாணத்தில் கடமையாற்றி மாகாணத்தை முன்னேற்ற பங்களிக்க வேண்டும்.**

இவ்வாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன தெரிவித்துள்ளார்.

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்ற யாழ்.வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை அனைத்துத் துறைகளிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. சாவகச்சேரி மருத்துவமனை மற்றும் அதேபோன்ற பல்வேறு துறைகளில் பல்வேறு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடக்கு மாகாணத்தில் கல்விகற்று உயர்பட்டப்படிப்புக்களை முடித்தவர்கள் பங்களிக்கவேண்டும்.

அவர்கள் நகரப் பகுதிகளைத் தவிர்த்து பின்தங்கிய பகுதிகளாகிய தீவுப் பகுதிகளில் கடமையாற்ற முன்வரவேண்டும்.

வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த , கல்வி மட்டத்தை உயர்த்த முன்வரவேண்டும்.

வடக்கு மாகாணத்தை முன்னேற்றி சிறந்த சமுதாயத்தை உருவாக்க நாளைய தலைவர்கள் என்ற ரீதியில் உங்களிடம் இந்தக் கோரிக்கையை விடுகின்றேன்- என்றார். (ச-20)





## மன்னார் மருத்துவமனையில் உள நல தினம் கடைப்பிடிப்பு

மன்னார், ஒக். 12

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் உலக உளநல தினம் 'அனைவரினதும் உளநல மற்றும் நல்வாழ்வை உலகளாவிய முன்னுரிமையாக்குவோம்' எனும் தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட உளநலப் பிரிவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட உள நல மருத்துவ அதிகாரி மருத்துவர் பஸில் ஜோகேஸ் லியோன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்ட மருத்துவமனையின் உளநலப் பிரிவில் கடமையாற்றும் பணியாளர்களது சேவையைப் பாராட்டி நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன், பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிகள், மருத்துவர்கள், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர், பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-213)

## என்.வி.கியூ. கற்கைநெறி விண்ணப்பங்கள் கோரல்

கிளிநொச்சி, ஒக்.12

கிளிநொச்சி மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வரும் என்.வி.கியூ. கற்கைநெறிகளுக்குப் புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தாதிய உதவியாளர் என்.வி.கியூ3, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்.வி.கியூ 4 கற்கைநெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிகள் யாவும் ஆறு மாத கால வகுப்பறைக் கற்கையாகவும் 6 மாத கால வெளிக்களப்பயிற்சியாகவும் உள்ளடக்கிய ஒரு வருட காலமும் முற்றிலும் இலவசமாகக் கற்பிக்கப்படும்.

கற்கைநெறிகள் யாவும் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கவுள்ளதால் கற்றைநெறிகளைக் கற்க ஆர்வமுள்ளோர் கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதி, நிழல் பிரதி, தேசிய அடையாள அட்டையின் மூலப்பிரதி, நிழல் பிரதி மற்றும் பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி, நிழல் பிரதி ஆகிய ஆவணங்களுடன் நாளை வியாழக்கிழமை மற்றும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் ஏ-9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை மாவட்ட காரியாலயத்துக்கு காலை 9 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களுக்கு 021 2285615, 0714553773 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14)



## அரசமைப்பு உரிமைகள் தெளிவூட்டல் கருத்தரங்கு

மன்னார், ஒக். 12

அரசமைப்பிலுள்ள உரிமைகள் கடமைகள் மற்றும் ஆவணப்படுத்தல் தொடர்பாக இளையோருக்கான தெளிவூட்டல் கருத்தரங்கு மன்னார் மாவட்டத்தில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான மன்னார் இணையத்தின் ஏற்பாட்டில் கருத்தரங்கு இடம்பெற்றது.

கருத்தரங்கில் வளவாளராக போரம் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளரும் சட்டக் கல்லூரி மாணவருமான அருந்தவராஜா நிரோஜன் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்.

அரசமைப்பிலுள்ள உரிமைகள், கடமைகள் மற்றும் ஒன்றுகூடலுக்கான உரிமை மற்றும் அவற்றுக்கான கட்டுப்பாடுகள் ஆகியவை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. (ச-213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



30.09.2022 அன்று இடம்பெற்ற மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டியில் உயரம் பாய்தல் 18 வயது பிரிவில் யாழ். நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகா வித்தியாலய மாணவியான

**செல்வி ஸ்ரீகிருஷ்ணன் துயாளினி**

அவர்கள் முதலிடம் பெற்று தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகி எமது பாடசாலைக்கும் எமது மண்ணுக்கும் பெருமை தேடித் தந்துள்ளார். அவரை வாழ்த்துவதோடு தேசிய மட்டத்திலும் சாதனைகள் புரிய எமது பாடசாலை சமூகம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ர மகா வித்தியாலய சமூகம்.**


# சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டு: முதியவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வயோதிபரின் விளக்கமறியலை நீடித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலையில் பதின்ம வயதுச் சிறுமி ஒருவர் வயோதிபரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கர்ப்பமாகியுள்ளார் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள், கோப்பாய் பொலிஸாருக்கும் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார் வயோதிபரைக் கைது செய்தனர். அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமியிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் அவரை கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

சிறுமியை தாயாரின் பாதுகாப்பில் வைத்திருக்க அனுமதியளித்து நீதிமன்றம் கட்டளையிட்டது. இந்த நிலையில் பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டின்கீழ் முதியவர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நளினி சுபாகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பத்தை முன்வைத்து சமர்ப்பணம் செய்தார். பிணை விண்ணப்பத்தை நிராகரித்த மேலதிக நீதிவான், நீதிவான் முன்னிலையில் பிணை விண்ணப்பத்தை முன்வைக்குமாறு குறிப்பிட்டு சந்தேகநபரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் சந்தேகநபர் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பத்தை முன்வைத்து சமர்ப்பணத்தை முன்வைத்தார். விசாரணைகள் நிறைவடையாத காரணத்தால் பிணை விண்ணப்பத்தை நிராகரித்த மன்று சந்தேகநபரை வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

(அ-ம-27-26)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2020 (பழைய பாடத்திட்டம் – மீள்பரீட்சார்த்திகளுக்கானது)
- முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2020 (புதிய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளினை 22.10.2022 (சனிக்கிழமை) தொடக்கம் 06.11.2022 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணை. பரீட்சை அனுமதி அட்டையினை 19.10.2022 (புதன்கிழமை) தொடக்கம் 21.10.2022 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.**

**11.10.2022** (CR38265) (3/6) **பதிவாளர்,**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

06.10.2022 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 36ஆவது பட்டமளிப்பு விழாவில் 2ஆம் அமர்வில் கணினி விஞ்ஞான துறையில் பட்டத்தைப் பெற்ற

**செல்வி விதுர்ஷா சிவகுமாரன் (B.Sc)**



அவர்களை மேலும் பல பட்டங்களைப் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்*
**அப்பா, அம்மா, அக்கா, அத்தான், பெறாமகன் தங்கை.**



எட்டாவது வருடத்தில்
## செந்தமிழன் STUDIO
வீடியோ & போட்டோ



திருமண விழா
பிறந்தநாள் விழா
பூப்புனித நீராட்டு விழா

உங்கள் மகிழ்வான தருணங்களை **விசேட விலைக்கழிவுடன்** உடனுக்குடன் பெற்றுக்கொள்ளுங்கள்!

**நேரடி ஒளிபரப்பு**
*Live Telecast*
உங்கள் இல்லத்து நிகழ்வுகளை **நேரலையாக ஒளிபரப்பு** செய்திட அழையுங்கள்!

செந்தமிழன் ஸ்ரூடியோ
**077 6405572**
யாழ்ப்பாணம்-வவுனியா-கிளிநொச்சி மன்னார்-முல்லைத்தீவு



## பணிப்பெண் தேவை

கந்தர்மடத்தில் வதியும். நோய்வாய்பட்ட வயோதிப பெண் ஒருவரை பராமரிப்பதற்கும். வீட்டு வேலை செய்வதற்கும் பணிப் பெண் ஒருவர் தேவை.
(தங்கிநின்று பணிபுரிதல் வேண்டும்)
**077 518 2148, 077 436 9277**

## விதைநெல் , தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட BG 406. மற்றும் BG 34.6 இன மூன்றரை மாத விதைநெல் மற்றும் நல்ல இன தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு. **077 659 2044**


## அக்கராயன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ-து
## பதிவு இலக்கம் - KN/150
## கிளைப் பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்

**கிளைக்குழுக்களை தெரிவு செய்தல் 22.10.2022 சனிக்கிழமை**

மேற்படி சங்கத்தின் துணை விதி 28(2) இன்படி அக்கராயன் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கமானது கிளைப் பொதுச் சபைக்கூட்டங்களை கீழ் குறிப்பிட்ட இடங்களில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. இதற்கு அமைய வாக்களிக்கத்தகுதியுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை அழைப்பாக ஏற்றுக்கொண்டு கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்காக கிளைப்பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு சமுகமளித்து கிளைக்குழுவை தெரிவு செய்ய உதவவும்.

01. கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும் 22.10.2022 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி
02. கிளைப் பொதுச் சபை கூட்டம் நடைபெறும் இடம்.

| தொடர் இலக்கம் | கிளை இலக்கம் | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | 01 | ஸ்கந்தபுரம் | ஸ்கந்தபுரம் இல. 1 அ.த.க பாடசாலை |
| 02 | 02 | கோணாவில் | கோணாவில் மகா வித்தியாலயம் |
| 03 | 03 | யூனியன்குளம் | யூனியன்குளம் அ.த.க.பாடசாலை |
| 04 | 04 | அக்கராயன் | அக்கராயன் மகா வித்தியாலயம் |
| 05 | 05 | வன்னேரிக்குளம் | வன்னேரி மகா வித்தியாலயம் |
| 06 | 06 | ஆனைவிழுந்தன் | ஆனை விழுந்தன் அ.த.க.பாடசாலை |
| 07 | 07 | ஊற்றுப்புலம் | ஊற்றுப்புலம் பொது நோக்கு மண்டபம் |
| 08 | 08 | கண்ணகைபுரம் | கண்ணகைபுரம் அ.த.க பாடசாலை |
| 09 | 09 | ஸ்கந்தபுரம் மேற்கு | ஸ்கந்தபுரம் இல.02 அ.த.க பாடசாலை |

**முக்கிய கவனத்துக்கு**

01. கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் - கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத்தகைமையுள்ள அங்கத்தவர்களின் 1/4 அல்லது 25 பேர் இதில் எது குறைவோ அதுவாகும்.
02. கிளைப் பொதுச் சபைக்கு சமுகமளித்துள்ள தகுதியான வாக்காளர்களிடமிருந்து 09 உறுப்பினர் தெரிவு செய்யப்படுவர். இக்கிளைக்குழுவிற்கு 18 - 35 வயதிற்குகிடைப்பட்ட இருவரையும் பண்டக்குழுவிலிருந்து ஒருவரும் மகளீர் குழுவிலிருந்து இருவரும் தெரிவு செய்யப்படுவர்.

**செயலாளர்,**
**077 914 8941** (CS 970) (3/6) **அக்கராயன் பல.நே.கூ.சங்கம், அக்கராயன்குளம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேஸ்வர ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கான

# ஓர் எச்சரிக்கையே திருவாசக முற்றோதல்

- கே.எஸ்.சிவஞானராஜா -



முன்னொருகாலம் போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய ஆட்சியாளர்களால் இலங்கை ஆக்கிரமிக்கப்பட்டு சைவ ஆலயங்கள் துவம்சம் செய்யப்பட்டும், சைவர்கள் மதமாற்றம் செய்யப்பட்டும் அவர்களுடைய மதங்கள் தீவிரமாகப் பரப்பப்பட்டன. தற்போது இலங்கை சுதந்திரமடைந்து 74 ஆண்டுகள் கடந்த நிலையிலே, ஆட்சிக்கு வந்த அரசுகள் தமது பெரும்பான்மை அரசியல், பொருளாதார சமூக பலத்தைப் பயன்படுத்தித் தமிழர் வாழ்ந்து வரும் இடங்களைச் சூறையாடத் தொடங்கிவிட்டனர். இதனது உச்சக்கட்டமாக, பாடல்பெற்ற திருத்தலமான திருக்கோணேஸ்வர ஆலயச்சூழல் படிப்படியாக, நன்கு திட்டமிடப்பட்டவாறு அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. புத்த பகவானும், புத்த விகாரையும் புதிதாக வடிவமைக்கப்பட்டவாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அதைவிட முன்னெப்பொழுதும் இல்லாதவாறு 20க்கும் மேற்பட்ட கடைகள் பெரும்பான்மையினருக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு இந்தக் கடைகள் நிரந்தரமானால் கோணேஸ்வர ஆலயமருகில் வீடுகளும், இவர்கள் வழிபட ஒரு சிறுவிகாரையும் கட்டிக்கொடுக்கக்கூடிய வாய்ப்புக்களும் வருவதற்கு இடம் உண்டு.

இது உண்மையும் கூட.

இந்த நிலையில், இந்துமத ஆதீன, ஆன்மிக பெரியார்களும் மற்றும் ஆர்வலர்களும் ஒன்றுகூடிப் பரிசீலித்தமைக்கு ஏற்ப யாழ்ப்பாணத்திலிருந்து கோணேஸ்வர ஆலயத்துக்கு ஓதுவார் குழுவினர் யாத்திரையாகச் சென்று திருக்கோணேஸ்வர ஆலய உட்பிரகாரத்தில் ஓதிப்பாராயணம் செய்தமை முதன்மையாகப் பதிவு செய்யப்படுகிறது. பல தரப்புகளிலிருந்தும் கோணேஸ்வர ஆக்கிரமிப்புத் தொடர்பாக கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் திணைக்களத் தலைவர் பேராசிரியர் மன விதானவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போதும் இது குருந்தூர்மலை விவகாரமாகவே அமையும் என்பது நாமறிந்த விடயமாகும். கொழும்பு செவிமடுக்காத நிலையில் இந்தியாவிடம் முறையிடுவது ஒன்றுதான் சாலவும் பொருத்தமானதாகும்.

இந்துமத நம்பிக்கையின் பிரகாரம் திருவாசக முற்றோதல் எனும் பேரெழுச்சியே இந்தியாவை மட்டுமல்ல உலகையே கோணேஸ்வரரின் பால் ஈர்த்துக்கொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. இறைமொழியையே நிறைமொழியாகக் கொண்டு, தேன்தமிழ்த் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரின் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு பெறுபேறு உண்டு.

அதன் விளைவு காலப்போக்கில் நாட்டிலும் தெரியும். வீட்டிலும் புரியும். கொழும்பிலும் கனக்கும்.

தேசபந்து, தேசாபிமானி க.கு.க.சிவபாலனின் தளரா, அயரா முயற்சியாலும் ஓதுவார்களின் அருள்மொழிப்பேறினாலும் சிவபூமி சமூகத்தவர்களாலும், கோணேஸ்வரப்பெருமானின் பரிபாலன சபையாரின் பூரண ஆதரவாலும் 'திருவாசகத்தேன்' கோணேஸ்வரர் சந்நிதியிலும், கோணமலையிலும் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது. கோணமலையை நனைத்தது.

சிவன் சொத்தாகிய திருக்கோணேஸ்வரத்தின் வாழ்விடங்களையும் வதிவிடங்களையும் எவராவது தீண்டவோ, சிதைக்கவோ, பறிக்கவோ, ஆக்கிரமிக்கவோ முனைவார்களாயின் அது நாட்டுக்கும் வீட்டுக்கும் ஆபத்தாகப் போய்விடும். வடக்கு - கிழக்கில் உள்ளது மட்டுமல்ல இலங்கையில் உள்ள சிவாலயங்களில் ஒழுங்காக திருவாசகம் முற்றோதல் நடைபெறுமாயின் அது 9 மாகாணங்களையும் சிவமயமாக்கும் என்பது தெளிவானதே.

இந்த நிகழ்வில் அத்தனை ஓதுவார்களும் ஏகமனதோடு சீராகவும் நேர்த்தியாகவும் அமர்ந்திருந்து சிவசின்னங்கள் இலங்கிட, வேட்டி கட்டி சால்வையை அரையில் சுற்றியபடி திருவாசகத் தேனைப் பிழையின்றி ஓதிமுடித்து கோணேஸ்வரப் பெருமானின் வரங்களை நாட்டுக்காகப் பெற்றெடுத்தனர்.

எமது பூர்வீகத்தலங்களை உரியவாறு மீட்டெடுக்க வல்ல ஒரு வல்லவன் எம்மிடையே தோன்றவேண்டும். சைவ சமய கலை, பண்பாட்டு உடை நடை பாவனையோடு, நிதி, நீதி, நிர்வாகம் பிசகாத, பேதங்களை வளர்க்காத, ஒரு புண்ணியவாளன் வரமாக வேண்டும். அத்துடன் தவ வாழ்வும், சிவப்பிடிப்பும் மேலோங்குமாறு வாழவும் வேண்டும். எமது நாட்டில், மேலும் போதைவஸ்துகள் பொசுங்கி, வேதநெறி தழைத்திட வழிசமைத்திட வேண்டும். சிறுவர்கள் பெண்கள் தீண்டப்படுவது உடனடியாகக் கவனிக்கப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும். திருவாசகமானது அல்லல் அறுத்து ஆனந்தமாக்கவல்லது. கட்டளைத்தளபதிகளாக இல்லாமல் யாவரும் திருவாசகம் ஓத வேண்டும்.! சிவம் கொண்டு நடத்தும் திருக்கேதீச்சரம் இந்திய உதவியால் கருங்கற்கோயிலாகப் பிரகாசிப்பது போல, திருக்கோணேஸ்வர ஆலயமும் இந்தியாவின் உதவியோடு அபிவிருத்தி செய்யப்பட ஆவனபுரியவேண்டும். இந்தியா நம்மை ஒருபோதும் கைவிடாது.



# நேற்றைய பொழுதைவிட இன்று அதிகமாகவே பசிக்கிறது

– உதயகுமார் –

உலரும் வாயினை
அடிக்கடி தண்ணிவிட்டு நனைக்கிறேன்

இப்படியாகவேனும்
எரியும் வயிற்றினை
அணைக்க நினைக்கிறேன்
அதிலும் தோற்றுப்போகிறேன்

நாளையும்,
அதற்கடுத்த நாளையும்,
இன்னும் அதிகமாய் பசிக்கலாம்
இல்லை பசியை உணரும் சக்தி
இல்லாமல்கூட போகலாம்..!

ஒரு ரொட்டித்துண்டையோ, அல்லது
காய்ந்த பாண்துண்டையோ நினைத்து
என் வயிறு காத்திருக்கக்கூடும்
என்ன சாப்பிட்டாய், என்று
யாராவது கேட்கமாட்டார்களா?
என் மனம் வானத்தை
அண்ணாந்து பார்த்து மூச்சுவிடுகிறது

இப்படியாக
நான் எதிர்பார்த்து எதிர்பார்த்து
என் பசி தீருமென
இப்போது வரை காத்திருக்கிறேன்
அதற்கான நம்பிக்கை
நீண்டு நீண்டு கனந்து எரிகிறது

எவனோ ஒருவன் வருவான் என்று
எதிர்பார்க்கும் அங்கலாய்ப்பு
இன்னும் எனக்குள்
இருந்துகொண்டேதான் இருக்கிறது ..!

## புதன்பொய்கைக்கு எழுதுங்கள்



புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புக்கள் விமர்சனங்கள், கவிதைகளை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு.

உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளையும் புகைப்படங்களுடன் அனுப்புங்கள்.

0773165555
மின்னஞ்சல் முகவரி :
puthanpoigai@gmail.com

அனுப்ப வேண்டிய முகவரி :
புதன்பொய்கை, உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் பார்வையும் உருவவியலும்



விதுஷா சோமசுந்தரம்
தற்காலிக உதவி விரிவுரையாளர்,
கலை வரலாறு,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

'ஔவை' என்ற சொல்லின் அர்த்தம் மூதாட்டி, தவப்பெண் என பழந் தமிழ் அகராதி முன்வைக்கின்றது. அகர வரிசையில் 11ஆம் எழுத்தாகிய 'ஔ' எனும் எழுத்தில் தொடங்கும் ஔவை என்ற பெயர் அவ்வா என்ற சொல்லின் திரிபாக கொள்ளப்படுகிறது. பிற்பட்ட காலத்தில் ஔவை எனும் சொல், வயது, அறிவாற்றல் ஆகியவற்றில் முதிர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படும் குறியீடாகவும் உள்ளது. ஔவையார் என்னும் பெயரில் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஒருவரா? அல்லது பலரா? ஒருவராக இருந்தால் அவர் எங்ஙனம் பல்லாண்டு காலம் உயிர்வாழ்ந்திருப்பார்? என்ற கேள்வி எழுகின்றது.

ஔவை என்ற பெண்பாற் புலவரின் ஆளுமை காலங்கடந்தும் நிற்பதற்கு அவரின் படைபபுக்களும் அவரின் வாழ்க்கையுமே காரணமாகும். 'ஔவை' என்பது அவருக்குரிய இயற்பெயர் அன்று. அது அக்காலத்தோர் அவருக்கு சூட்டிய சிறப்புப் பெயராகும். தெலுங்கு மொழியில் 'அவ்வ' என்பதும், கன்னடமொழியில் 'அவ்வெ' என்பதும் 'அவ்வை' என்ற தமிழ்ச் சொல்லின் திரிபுகள் ஆகும். அதாவது அவ்வையார் என்ற தமிழ்ச் சொல்லின் மூலத்திலிருந்தே மேற்குறிப்பிட்ட சொற்கள் வந்ததாக மொழியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். வரலாற்று நோக்கில் ஔவையார் என்ற பெயருடைய பலர் வெவ்வேறு காலத்தில் வாழ்ந்துள்ளனர். முனைவர் அருணாசலம் என்பவர் 6 ஔவையார்கள் வாழ்ந்தனர் எனக் குறிப்பிடுகிறார். முனைவர் தாயம்மாள் என்பவர் 'அவ்வையார் அன்று முதல் இன்று வரை' என்ற நூலில் ஆறு தொடக்கம் ஏழு ஔவையார்கள் இருந்தனரெனக் குறிப்பிடுகின்றார்.

**வரலாற்றில் ஔவைகள்**

1. கடைச்சங்க ஔவையார் கி.பி. 2ஆம் நூற்றாண்டு - அதியமானுக்காக தொண்டைமானிடம் தூது போனவர்.
2. அங்கவை, சங்கவை கால ஔவையார்.
3. சேரமான் பெருமாள் நாயனார் கால ஔவையார் 8ஆம் நூற்றாண்டு.
4. கம்பர்கால ஔவையார் 12ஆம் நூற்றாண்டு.
5. அறவைக் குறள் ஔவையார் 14ஆம் நூற்றாண்டு.
6. ஆத்திசூடி ஔவையார் 16ஆம் நூற்றாண்டு (கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை) அறநூல் ஔவையார்.
7. பந்தனத்தாதி ஔவையார் 17ஆம் நூற்றாண்டு.



ஔவையார் இளம் வயதிலேயே விநாயகப்பெருமானை வேண்டி முதுமைக் கோலத்தைப் பெற்றவர் என்றும் சொல்லப்படுவதுண்டு. இவ்வாறு அவர் முதுமைக்கோலம் பெறவேண்டியதன் காரணம் என்ன? அக்காலத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஏற்பட்டதால் அதிலிருந்து பாதுகாப்பதற்காகவா? சிலவேளைகளில் 1886ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட முதிரா முதுமை (Progeria) நோயால் ஔவையார் தாக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்துக்களையும் ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர். சங்க இலக்கியமான புறநானூற்றில் 89ஆவது பாடலில் ***'இழையணிப் பொலிந்த ஏந்துகோட்டு அல்குல் மடவால் உண்கண் வாள் நுதில் விறலி!....'*** என ஔவையார் தனது உருவவியல் பற்றி வர்ணித்துள்ளார்.

அதாவது மை தீட்டிய கண்களும், வட்டமான நெற்றியும், இடுப்பில் அழகிய அணிகலன்களை அணிந்தவர் என்பதை தனபாலசிங்கம் என்பவர் செய்யுளின் பொருளை முன்வைப்பதன் ஊடாக எடுத்துக்காட்டியுள்ளார்.

உலகப் பெண்பாற் புலவர்களிடையே தமிழ் ஔவைக்குச் சிறப்பிடம் உண்டு. தமிழகத்தில் ஔவையாரை கிரேக்க புலவராகிய சாப்போ என்பவருடன் தொடர்புபடுத்தி நோக்கும் வழக்கம் காணப்படுகிறது. அந்தவகையில் சேவியர் தனிநாயகம் அடிகளார் என்பவர் 'தமிழ் கவிதையின் இயல்பு' (Nature of tamil poetry) என்ற நூலில் 'தமிழ் சாப்போ' என்றும் வ. சு. செங்கல்வராயப்பிள்ளை மற்றும் எம். ஏ. எஸ். பூரணலிங்கப்பிள்ளை என்பவர்கள் ஔவையாரைத் 'திராவிட சாப்போ' என்று குறிப்பிடுகின்றனர். அமெரிக்க நாட்டின் மெக்ஸிக்கோவில் பிரமாண்ட அரசுப் பொது உயர்நிலைப்பள்ளியில் வானியல் துறையின் குறிக்கோள் வாசகம் 'கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு' என்ற ஔவையாரின் வரிகளே. (தனிப் பாடல்கள்) அந்தவகையில் ஔவையின் அறிவியல் சிந்தனைகள் உலகளவில் பிரபல்யம் அடைந்தமை நோக்கத்தக்கது. 12ஆம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்த ஔவையின் தாயார் 'ஆதி' என்றும் தந்தை 'பகவன்' என்றும் பண்டிதர் க.இராசையா 'ஔவையார்' என்ற நூலில் முன்வைக்கின்றார். இவ்வாறான கருத்தாடல்கள் எவ்வளவு தூரம் உண்மை என்பது விமர்சனத்துக்குரியதாகும். ஔவையார் வரலாற்றை முதன்முதலில் எழுதியவர் எஸ்.அனவரத விநாயகம்பிள்ளை. இவர் 1906இல் ஔவையார் சரித்திரம் என்ற பெயரில் எழுதியுள்ளார். ஔவையார் பற்றி அறியாமல் இருப்பவர்கள் தமிழராக இருக்கமுடியாது. திருவள்ளுவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் திருக்குறளை அரங்கேற்ற முடியாமல் தவித்தவேளை ஔவையே உதவினாரெனக் குறிப்பிடப்படுகிறது. தமிழ்மொழியின் தொன்மையை உலகுக்குப் பறைசாற்றும் விதத்தில் காலங்களை வென்று தமிழ்மொழியின் பொக்கிஷங்களை உலகுக்கு அளித்தவர் எனவும் ஔவையார் போற்றப்படுகின்றார்.

**ஔவையாருக்குத் தெய்வநிலை**

ஔவையாரை தமிழ்ப் புலவர் என்று நோக்குவது மட்டுமல்லாமல் தெய்வநிலைப்படுத்தலும் தமிழ்நாட்டில் காணப்படுகிறது.

குறிப்பாக, ஔவையாருக்கு தனிக்கோயில் அமைத்து வழிபடும் முறையும், அது தவிர பிரதான இந்துக் கோயிலுக்குள் பரிவாரத் தெய்வமாக ஔவையார் விக்கிரகம் அமைத்து வழிபடும் முறையும் காணப்படுகிறது. ஆலஞ்சேரி ஔவையார் ஆலயம், திருவையாற்றில் உள்ள ஔவையார் கோயில், தாழக்குடி ஔவை அம்மன் ஆலயம், துளசியாபட்டினத்தில் உள்ள ஔவையார் விஸ்வநாத சுவாமி திருக்கோயில், குறத்தியறை மலைச் சரிவில் உள்ள குடைவரைக்கோயில்கள் (அழகிய பாண்டியபுரம்), பார்வதிபுதூரில் உள்ள ஔவை அம்மன் ஆலயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். திருவையாற்றில் உள்ள ஔவையார் கோயிலின் கருவறையில் இரண்டேகால் அடி உருவத்தில் வலதுகையில் செங்கோலும் இடதுகையில் ஓலைச்சுவடியும் கொண்டு ஔவையார் விக்கிரகம் அமைக்கப்பட்டுள்ளது.

துளசியாபட்டினத்தில் உள்ள ஔவையார் விஸ்வநாத சுவாமி திருக்கோயிலில், ஔவையார் மணிமண்டபம், பாடல்கள் கல்வெட்டாக அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கோயிலில் தான் (மூவேந்தர் அனுமதியுடன்) அங்கவை, சங்கவைக்கு ஔவையாரால் திருமணம் நடத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. அங்கு நுழைவாயிலில் நின்ற கோலத்தில் ஔவையார் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஔவையாரை 'கல்யாண ஔவையார்' என அவ்வூர் மக்கள் அழைக்கின்றனர். இந்த ஆலயத்தில் உள்ள ஸ்ரீவிநாயகர், ஸ்ரீகரபுரநாதர், ஔவைப்பிராட்டி ஆகியோரை வழிபட்டால் செவ்வாய் தோஷம் விலகி திருமணம், புத்திர பாக்கியம் கிட்டும் என நம்பப்படுகிறது.

ஔவையாரை தெய்வமாக்கி, நோன்பிருந்து வணங்குகின்ற வழக்கம் நாஞ்சில் நாட்டிலிருந்து வருகின்றது. இதனை ஔவை நோன்பு என்று அழைப்பர். ஔவை அம்மன் ஆலயங்களில் ஆடிமாதச் செவ்வாய்க்கிழமைகளில் பெண்கள் கூடி, கூழும் கொழுக்கட்டையும் படைத்து வழிபடுகின்றனர். ஔவையாருக்கான படிமம், கதைகளுக்கு ஊடாகவே கட்டப்பட்டுள்ளது. அதாவது வாய்மொழிக் கதைகளின் ஊடாகவும் வரலாற்றின் ஊடாகவும் பொதுமைப்பாடான வயதான முதிர்ந்த தமிழ்க் கிழவிக்கான படிமம் காலங்காலமாக உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஓவியம், சிற்பம், புத்தக அட்டை, திரைப்படம், தமிழ் மற்றும் சமயப்பாடப் புத்தகங்கள் ஊடாக மக்கள் மத்தியில் ஔவையார் படிமம் பிரபல்யம் அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் தாழக்குடி ஔவை அம்மன் ஆலயத்தின் திரைச்சீலையில் வரையப்பட்ட ஔவையாரின் ஓவியம் இளமையான தோற்றத்தில் ஒளிவட்டத்துடன் காட்சிப்படுத்தியமையானது ஔவை பற்றிய பொதுமைப்பாடான உருவவியலை கேள்விக்குட்படுத்துவதாக உள்ளது. ஒருவகையில் ஔவையாரின் உருவவியல் மற்றும் அவர் பற்றிய பார்வை தமிழ் அடையாளம், தமிழ்த்தனத்துடன் இணைந்துள்ளமையானது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பெண்ணின் சுதந்திரம் அதர்மத்தை அழிப்பதேயாகும்...



**ஒரு பெண் அடக்கத்தின் திருவுருவாய் இருந்தால் இந்த அகிலத்தில் அவள் ஆதிபராசக்தியாக பிறரால் நிச்சயம் போற்றிப் புகழப்படுவாள். அதே பெண் அகங்காரத்தின் பேயுருவாய் இருந்தால் நரகத்தின் வாசல் கூட அடைக்கப்பட்டு விடும் என்பதே சனாதன தர்மத்தின் ஆழமான கோட்பாடாகும்.**

சில தேசங்களில் பட்டத்து இளவரசியாக இருந்த மகாராணிகளின் அகங்காரத்தால் சில மாமன்னர்களின் தலைகள் கூட துண்டிக்கப்பட்டு தரை சாய்க்கப்பட்டு சில சாம்ராஜ்யங்களும் வீழ்ச்சியுற்றிருக்கின்றன என்பதை நாம் வரலாற்றில் இருந்து மறக்கக் கூடாது.



பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பார்கள் நம் முன்னோர்கள். இன்று பேயே பீதி கொள்ளும் அளவுக்கு பெண்ணினம் கருணையற்று நடந்து கொள்வது மிகவும் வேதனைக்குரிய விடயமாக பிறரால் பார்க்கப்படுகின்றது.

உடுக்கும் உடையிலும். கற்றுத் தெளிந்த கல்வி அறிவிலும். உண்ணும் உணவிலும். வகிக்கும் பதவியிலும். கணவனோடு உறங்கும் பள்ளியறையிலும் ஒரு பெண்ணானவள் நாணத்தோடு நடந்து கொள்ள வேண்டும். இல்லையேல் அகங்காரம் அவள் மனதில் தன்னிலை மறந்து குடி புகுந்து விடும்.

ஒரு பெண் பிறந்த வீட்டில் பெற்றோருக்கு சிறந்த மகளாகவும். புகுந்த வீட்டில் கட்டியவனுக்கு சிறந்த மனைவியாகவும். மாமன் மாமிக்கு சிறந்த மருமகளாகவும். தான் பெற்ற பிள்ளைகளுக்கு சிறந்த தாயாகவும். தான் பணிபுரியும் இடத்தில் பணியாளருக்கு மனிதாபிமானமுள்ள அதிகாரியாகவும். இல்லாவிட்டால் சிறந்த பணியாளராகவும் இருந்தால் மட்டுமே சனாதன தர்மத்தில் ஆன்மீக ரீதியாக அவள் முக்தியை அல்லது மோட்சத்தை நோக்கி நடைபோட முடியும். இவையெல்லாம் நாணமுள்ள பெண்ணுக்கே சாத்தியமாகக் கூடிய ஒன்று தன்னிலை மறந்து அகங்காரமெனும் வாளால் நாணத்தை பரிபூரணமாக வெட்டி எறிந்த பெண்ணுக்கு நரகம் கூட மிக சந்தேகமே.

இன்றைய நவீனத்துவத்தில் பல பெண்கள் பல துறைகளில் பல பதவிகளில் ஆண்களுக்கு நிகராகவும். பிற பெண்களுக்கு முன்னோடியாகவும் திகழ்கின்றார்கள்.



இது மெச்சத்தக்கது மட்டுமல்ல மிகவும் பாராட்டத்தக்கதுமாகும். ஆனால் அவர்கள் சுதந்திரம் ஒரு எல்லை வரைதான் என்பதை உணரத் தலைப்பட வேண்டும்.

பாஞ்சாலியின் சுதந்திரம் துரியோதனனின் மரணத்தில் முடிந்தது. நளாயினியின் சுதந்திரம் கட்டிய கணவனின் சாபத்தை நீக்குவதில் முடிந்தது. கண்ணகியின் சுதந்திரம் கணவனின் மரணத்துக்காக மதுரையை எரிப்பதில் முடிந்தது. இவையெல்லாவற்றையும் இந்தப் பெண்கள் எந்த சக்தி கொண்டு செய்தார்கள். தங்கள் பெண்ணாதிக்கத்தை மறந்து தாங்கள் கட்டிய கணவனுக்கு கட்டுப்பட்டு அவர்களை கடவுளாக வழிபட்டதாலேயே தங்கள் கற்பின் திறன் கொண்டு இந்தச்சாதனைகளை படைத்தார்கள் என்பதே சரியாகும்.

ஒரு பெண்ணின் சுதந்திரம் என்பது அதர்மத்தை அழித்து தர்மத்தை காப்பாற்றுவதிலேயே முடிய வேண்டும். அப்போதுதான் அவள் பரிபூரணமான சுதந்திரத்தை அனுபவித்தவளாகக் கருதப்படுவாள்.

இங்கு சுதந்திரம் என்பது தனக்குத் தானே கட்டுப்பாடுகளை வகுத்துக் கொண்டு அதன் வழியில் ஒரு விநாடி கூட பிசகாது நடப்பதே சுதந்திரம் என்கிறார் பாரதத்தின் அகிம்சாவாதி மகாத்மா காந்தி.

சாம் ரமேஸ்குமார்

இதிலிருந்து எமக்கு விளங்குவது யாதெனில் மனித சுதந்திரம் என்பது தனக்குத்தானே வகுத்த கட்டுப்பாடுகளை எப்போதும் தளர்த்தாமல் இருப்பதே ஆகும்.

இது ஆடவர்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் சேர்த்து தான் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

வீடுகளின் புகடுகளில் அடுப்பூதிக் கொண்டிருந்த பெண்கள். பரமாத்மாவான கிருஸ்ணனுக்கு நிகராக இந்த அகிலத்தில் புல்லாங்குழல் ஊத ஆசைப்படுவது ஒன்றும் தப்பில்லை. ஆனால், அவர்களின் சுதந்திரம் எதுவரை என்பதை தீர்மானித்துக் கொண்டு தர்மத்துக்கு கட்டுப்பட்டு நடப்பதே சமகாலத்தில் மனித குலத்துக்கு ஆரோக்கியமான விடயமாகும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

# அமரர் வேலாயுதர் வினாசித்தம்பி புராணங்களின் வழிவாழ்ந்த உத்தமர்

**"அமரர் வேலாயுதர் வினாசித்தம்பி ஐயா இறைபதம் அடைந்து ஓராண்டுத் திதி இன்றாகும். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது."**

'இன்றைய இயந்திரமயமான உலகில் காலச்சிக்கனம் கருதி சைவப்பாரம்பரியங்கள் மறைந்து கொண்டு வருகின்றன. உதாரணமாக திருவெம்பாவை காலத்தில் மார்கழி மாதக் கடும் குளிரையும் பொருட்படுத்தாது அதிகாலை நேரத்தில் சைவ அடியார்கள் வீடு வீடாகச் சென்று திருவெம்பாவைப் பதிகங்கள் பாடுதல், சித்திரா பௌர்ணமி தினத்தில் சைவாலயங்களில் சித்திர குப்தனார் கதை வாசித்து பயன் கூறுதல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

முன்பு சைவாலயங்களில் நடத்தப்படும் கதாபிரசங் கங்கள், புராண நாடகங்கள், வில்லிசை போன்ற நிகழ்வுகள் மூலம் சைவப் புராணங்கள் கூறும் கதைகள், தத்துவங்கள் சாதாரண பாமரமக்களையும் சென்றடைந்தன. இதனாலேயே 'துர்க்கா துரந்தரி' சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, நடிகமணி வி.வி. வைரமுத்து, 'கலாவிநோதன்' சின்னமணி கணபதிப்பிள்ளை போன்றவர்கள் ஈழத்தமிழ் சைவ வரலாற்றில் என்றும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளனர். இதே வரிசையில் ஆலயங்களில் புராணம் படித்துப் பயன்கூறும் சைவப்பாரம்பரியத்தை அழியவிடாமல் பேணிப்பாதுகாத்து வந்துள்ளார் புராணபடன வித்தகர் அமரர் வேலாயுதர் வினாசித்தம்பி ஐயா.

மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட வினாசித்தம்பி ஐயா கந்தசஷ்டி காலத்தில் சைவாலயங்களில் கந்தபுராணம் படித்துப் பயன் கூறும் திருத்தொண்டை புரிந்து அண்மையில் தமது எழுபத்தெட்டாவது வயதில் இறைபதம் அடைந்துள்ளார். தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம், திருக்கேதீச்சரம், கதிர்காமம், வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுதப் பெருமான் ஆலயம் உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பல சைவாலயங்களில் புராணம் படித்துப் பயன் கூறும் திருத்தொண்டை மேற்கொண்டு வந்துள்ளார் 'புராணபடன வித்தகர்' வினாசித்தம்பி ஐயா.

நிமிர்ந்த தோற்றம், ஆரோக்கியமான தெளிவான குரல், உறுதியான ஓசை நயம் என்பன வினாசித்தம்பி ஐயாவின் புராண படிப்பைக் கேட்டுக் கொண்டிருக்கும் அடியவர்களைப் பக்திப் பரவசத்தினுள் ஆழ்த்திவிடும். அதாவது ஐயாவின் தோற்றப் பொலிவும் திருநீற்றுப் [illegible] புராணம் [illegible] அடியவர்களும் மெய் மறந்து மணித்தியாலக் கணக்காக அலுப்பு சலிப்பு இன்றி புராணத்தினுள் மூழ்கிக் கொண்டிருப்பர். கந்தபுராணம் மட்டுமன்றி பெரியபுராணம், பிள்ளையார் கதை, சித்திரகுப்தனார் கதை உள்ளிட்ட பதின்மூன்று வகையான புராணங்களுக்கு படித்துப் பயன் கூறும் செயற்பாட்டை தமது இறுதி மூச்சு வரை எழுபது ஆண்டுகள் மேற்கொண்டு வந்துள்ளார்.

வினாசித்தம்பி ஐயாவின் இறைபணியை கௌரவிக்கும் வகையில் 1996ஆம் ஆண்டில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் 'புராணபடன வித்தகர்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. அத்துடன் 2014ஆம் ஆண்டில் தென்மராட்சி பிரதேச கலாசாரப் பேரவை 'கலைச்சாரகம்' என்ற பட்டத்தையும் 2016ஆம் ஆண்டில் கலாசார அலுவல்கள் திணைக்களம் 'கலாபூரணம்' என்ற அரச விருதையும் 2018ஆம் ஆண்டில் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் இலங்கைக் கிளை 'சிவனருட் செல்வர்' என்ற பட்டத்தையும், யாழ்ப்பாண இந்துசமய பேரவை 2019ஆம் ஆண்டில் 'பௌராணிக வித்தகர்' என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்துள்ளன.

**சு.சிவனேசராசன்**
**ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்**
**தீவக கல்வி வலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலைக் காலந்தாழ்த்த அனுமதிக்கவே முடியாது

## விஜித ஹேரத் எம்.பி தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.12**

**தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளமைக்கமைய தேர்தலை நடத்த இடமளிக்கவேண்டும். தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாது என்ற அச்சத்தினாலேயே அரசாங்கம் காலம் தாழ்த்துவதற்கு தற்போது புதிய உத்தியைக் கையிலெடுத்துள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது :

எதிர்வரும் மார்ச் மாதமளவில் உள்ளூ ராட்சித் தேர்தலை நடத்தவேண்டும். ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு பின்னர் அதற்கான தினத்தை அறிவிக்க முடி யும் என தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் தெரிவித்திருந்தது. ஆணைக்குழு அறிவித்துள்ளமைக் கமைய தேர்தலை நடத்துவதற்கு இடமளிக்க வேண்டும்.

அதைவிடுத்து மேலும் தேர்தலை காலம் தாழ்த்த ஒருபோதும் அனும திக்க முடியாது.

உள்ளூராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண் டுமெனில் தொகுதிகள் குறைக்கப்பட வேண்டும்.

தொகுதிகளைக் குறைக்க வேண்டு மெனில் மீண்டும் எல்லைகளை நிர்ணயிக்க வேண்டும்.

எல்லை நிர்ணயம் என்பது இலகு வான விடயமல்ல. இது சிக்கலான விடயம் என்பதால் நீண்டகால அவ காசம் தேவைப்படும். எனவே தான் தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் இதை ஒரு உத்தியாகப் பயன்படுத்துகின்றது.

உள்ளூராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண் டுமெனில் தேர்தலை நடத்தி அதன் பின்னர், அதற்கான நடவடிக்கை களை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறில்லை என்றால் இப்போதே உள்ளூராட்சி சபைகளைக் கலைக் குமாறு அரசாங்கத்தை வலியுறுத்து வோம்- என்றார். (எ-14)

# 22 திருத்தச் சட்ட நடைமுறை மொட்டுக்கட்சியாலேயே இழுபறி

## சு.க. பொதுச்செயலாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 12

அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டவரைவு பொது ஜன பெரமுன கட்சியாலேயே இழுபறி நிலையிலுள் ளது என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

22ஆவது திருத்தச் சட்டவரைவு அடுத்த நாடாளு மன்ற அமர்வின்போது விவாதத்துக்கு எடுத்துக்கொள் ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அது விவாதத்துக்கு வருமா? என்பது தொடர் பில் எதிரணிகளுக்கு ஐயப்பாடு உண்டு.

இந்தச் சட்டவரைவு தொடர்பில் மொட்டுக்கட்சிக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இரட்டைக் குடியு ரிமை தடை நீக்கப்படவேண்டும் என சிலர் வலியு றுத்துகின்றனர். 22 தேவையில்லை என மேலும் பலர் அந்தக் கட்சியில் கூறுகின்றனர்.

இதனால் அரசதரப்பில் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரமுடியாத நிலைமை தோன்றியுள்ளது. 22ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் மொட்டுக்கட் சியே குழப்பம் விளைவிக்கின்றது- என்றார். (ச-44)



## றுகுணு பல்கலையில்

# பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்களுக்குத் தடை

கொழும்பு, ஒக். 12

பகிடிவதையில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் றுகுணு பல்கலைக்கழகத் தின் இரண்டாம் வருட மருத்துவ பீட மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது என பல் கலையின் பதில் பீடாதிபதி பேராசி ரியர் சன்ன யஹத்துகொட தெரி வித்துள்ளார்.

றுகுணு பகல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்துக்கு புதிய மாண வர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இதன்போது புதுமுக மாணவர் களை பகிடிவதைக்கு உட்படுத்திய 200 க்கும் அதிகமான இரண்டாம் வருட மருத்துவபீட மாணவர்க ளுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட் டுள்ளது என மேலும் தெரிவிக்கப் படுகிறது. (ச-இ)

# எதிர்வரும் தேர்தல்களில் பெரமுன வெற்றியீட்டும்

## *ரோஹித அபேகுணவர்த்தன நம்பிக்கை*

கொழும்பு, ஒக். 12

நாட்டின் பெரும்பாலான மக்கள் ராஜ பக்சக்களுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவார்கள். இதனால் எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்க ளில் சிறிலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றிபெறும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

காலிமுகத்திடல் போராட்டத்தைத் தொடர்ந்து பெரமுன பலவீனமடைந்து விட்டது. இனி அரசியலில் பெரும் பின்னடைவை எதிர்கொள்ளும் எனப் பலர் அரசியல் பிரசாரங்களை முன் னெடுத்தார்கள்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மாநாடு கடந்த 8 ஆம் திகதி "ஒன்றி ணைந்து எழுவோம், களுத்துறையில் இருந்து ஆரம்பிப்போம்" என்ற தொனிப்பொருளில் களுத்துறையில் இடம்பெற்றது. பொதுஜன பெரமுன வின் இந்த எழுச்சி பிரதான அரசியல் கட்சிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தி யுள்ளது.

களுத்துறையில் இடம்பெற்ற கூட்டம் நகைப்புக்குரியது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்டதால் தான் நாடாளுமன் றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். பொதுஜன பெரமுனவின் புண்ணி யத்தால் அரசியலில் பிரவேசித்தவர்கள் தான் இன்று பொதுஜன பெரமுனவை விமர்சிக்கின்றார் கள்.

இவ்வாறான நிலையிலும் நாட்டின் பெரும்பாலான மக்கள் ராஜபக்சக்க ளுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கு வார்கள். எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களிலும் பெர முன அமோக வெற்றி பெறும் என் பதை உறுதியாகத் தெரிவிக்கின் றேன்- என்றார். (எ-14)

# நாமலுக்கு பதவி கொடுக்க பின்னடிக்கும் ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 12

10 அமைச்சுப் பதவிகளே வெற்றிடமாக உள்ள நிலையில் 14 பேருக்குப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. அதனாலேயே அமைச் ரவை நியமனம் தாமதமாகி வருகின்றது என்று அரச தரப்புக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

வெற்றிடமாகவுள்ள 10 அமைச்சுப் பதவிகளுக்குப் பெரும்பான்மையை கொண்டுள்ள பொதுஜன பெர முன கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்க ளின் பெயர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அதில் இருவரை அமைச் சர்களாக நியமிக்க ஜனாதிபதி இணங்கவில்லை என்று அறியவருகின்றது.

இதேசமயம், அரசுக்கு ஆதரவு வழங்கும் கட்சி களைச் சேர்ந்த துமிந்த திஸநாயக்க, வஜிர அபே வர்த்தன, ஏ.எல்.எம்.அதாவுல்லா, ஜீவன் தொண்ட மான் ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங் கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

10 அமைச்சுப் பதவிகளே வெற்றிடமாக இருக்கும் நிலையில் 14 பேர் பரிந்துரைக்கப்பட்டுள்ளமையால் நியமனங்கள் தொடர்ந்து தாமதமாகி வருகின்றன என்று கூறப்படுகின்றது. அதேவேளை, ஜனாதிபதி அமைச்சராக நியமிக்க இணக்கம் காட்டாத இருவ ரின் பெயர்ப்பட்டியலில் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த நாமல் ராஜபக்சவின் பெயரும் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்கள் முயற்சி இழுபறி யாகும். செயல்களில் கவனம் தேவை. மனதில் சிறு சிறு குழப்பம் ஏற்படும். எதிர்பார்ப்பு நிறைவேறாமல் தாமத மாகும். வியாபாரத்தில் கவனம் தேவை.

**இடபம்:** சனிபகவான் வக்கிர நிவர்த்தி அடைந்துள்ளதால் பொருளாதார நிலை உயரும். செலவு அதிகரிக்கும். குடும் பத்தினருடன் ஆரோக்கியமான விவாதம் வந்து போகும்.

**மிதுனம் :** குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். எண்ணம் நிறைவேறும். மகிழ்ச்சி மலரும்.

**கடகம்:** வாய்ப்புகளைப் பயன்படுத்து வீர். உங்கள் எண்ணம் நிறைவேறும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். குடும்பத்தை மகிழ்ச்சிப் படுத்துவீர்கள்.

**சிம்மம்:** நேற்று ஏற்பட்ட நெருக்கடி விலகும். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். தடைப்பட்ட செயல்களில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். உங்கள் முயற்சி வெற்றியாகும்..

**கன்னி:** செயல்களில் நெருக்கடிகள் தோன்றும். மனம் சோர்வடையும். உங்கள் முயற்சிகளில் தாமதம். அடுத்த வர் விஷயங்களில் தலையிட வேண் டாம். மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள்.

**துலாம்:** உங்கள் முயற்சிகள் எளிதாக நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் உண்டான சங்கடம் விலகும். உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். நேற்றிருந்த தடைகள் விலகும்.

**விருச்சிகம்:** புதிய பாதையில் பயணம் செய்வீர். வருமானம் அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். புதிய முயற்சி நல்லதாக முடியும். மற்றவர்களால் முடிக்க முடியாத ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:** குடும்பத்தில் உள்ளவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய் வீர். வருமானம் அதிகரிக்கும். எதிர் பார்த்த பணம் வந்து சேரும். வியாபா ரத்தை மேம்படுத்துவீர்கள்.

**மகரம்:** பயணங்களால் அலைச்சல் அதிகரித்தாலும் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான நாள். புதிய வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும். வியாபாரத்தில் கவனம் அதிகரிக்கும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக முடிவுக்கு வராமல் இருந்த ஒரு பிரச்சினை முடிவுக்கு வரும். தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு உங்கள் செயல்களில் லாபம் காண்பீர்கள். நிதிநிலை உயரும்.

**மீனம்:** எதிர்பார்த்த வரவு வந்து சேரும். நீண்டநாள் முயற்சி ஒன்று நிறைவேறும். பழைய பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். வருமானத்துக்குரிய வழி தெரியும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 - 04 - 1948

இறப்பு 11 - 10 - 2022



## சின்னையா சின்னம்மா

சரசாலையைப் பிறப்பிடமாகவும், மடத்தடி சண்டிலிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சின்னம்மா அவர்கள் நேற்று (11.10.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், சிவனேசன், ஜீவராணி, ஜெயமதி (ஆசிரியர் - கல்லாறு மகா வித்தியாலயம்) ஜெயநிதி (ஆசிரியர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சிவதீசன், காலஞ்சென்றவர்களான சிவதாசன், சிவஜீவன், சிவகஜீப் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2022) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி,
சண்டிலிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 47072) (3/6)

# மணியந்தோட்டத்தில் இலவச மருத்துவமுகாம்





சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தையொட்டி மணியம் தோட்டம் இணைந்த கரங்கள் அமைப்பால் இலவச மருத்துவ முகாம் கொழும்புத்துறை மணியம் தோட்டம் கர்த்தர் ஆலயத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.

கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் மற்றும் மணியம்தோட்டம் கர்த்தர் ஆலயத்தின் பங்களிப்பில் மணியம்தோட்டம் கர்த்தர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி. ஞா. அற்புதராஜா தலைமையில் இந்த மருத்துவ முகாம் இடம்பெற்றது. மருத்துவமுகாமில் 250 இற்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு நீரிழிவு, இரத்த அழுத்தப் பரிசோதனை மற்றும் மருந்துகள் என்பவை இலவசமாக வழங்கப்பட்டன.

(சு)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றும் திரு. பரமேஸ்வரன் கஜகரன் அவர்களின் அன்புத் தந்தை

**வேலுப்பிள்ளை பரமேஸ்வரன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

(CS 21197) 6

# மரண அறிவித்தல்



பிறப்பு 14.02.1934

இறப்பு 10.10.2022

## திருமதி அன்னலட்சுமி செந்தில்நாதன்

யாழ். வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி செந்தில்நாதன் அவர்கள் நேற்று முன்தினம் (10.10.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பு வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற செந்தில் நாதன் அவர்களின் பாசமிகு மனைவியும், நந்தினி (இலங்கை), நளாயினி, சிவஜெயன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகலிங்கம் (யோகுரேடிங்கோ), இரத்தினசபாபதி, நிர்மலா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராசசேகரம், இராசரட்ணம், சேனாதிராசா சிவஞானம்மா, மகாலிங்கம், தங்கராசா தங்கரத்தினம் மற்றும் பாலதுரை சிந்தாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா, கோணேஸ்வரி, மகேஸ்வரி, பரமேஸ்வரி, யோகேஸ்வரி, ஆகியோரின் அன்பு மைத்துனியும், குகபாலினி - ஆனந்தகுமார், குகப்பிரியா - அரவிந், லோகுதாஸ் - சுவஸ்திகா, குகதர்சன் - கலைச்செல்வி, சுபேஸ்குமார், சிந்துஜா, உஷாந்தன், கிருசாந்தி, ஜானுகன், அரவிந், ஷாலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சஜீவன், ஜனுசன், அச்சுதன், அபிஷன், நிர்த்தனா, சௌமீனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

138/2, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 47075) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.2 கோடிக்கு ஜீப் வாங்கிய 20 வயது இளைஞன் கைது

கொழும்பு, ஒக்.12

சட்டவிரோதமான முறையில் சம்பாதித்த பணத்தின் மூலம் 65 இலட்சம் ரூபா மதிப்புள்ள கார் மற்றும் 2.5 கோடி ரூபா பெறுமதியான ஜீப் என்பவற்றை கொள்வனவு செய்த 20 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரலஸ்கமுவ பிரதேசத்தை சேர்ந்த இவர், பண மோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் தனது தந்தை சம்பாதித்த பணத்தைப் பயன்படுத்தியே இந்த இளைஞர் வாகனங்களை கொள்வனவு செய்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவின் அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நேற்று புதுக்கடை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (எ)

## பெறுகைகளுக்கான அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை**
**யாழ்ப்பாணம்**

### வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்கான பெறுகை - 2022/2023

தலைவர். பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்குத் தகமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01 | H/LS/2022/01 தொடக்கம் 10வரை | அழுக்குதுணிகள் சலவைச் சேவை | பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, சத்திர சிகிச்சை கூடம் , பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (ஆ)தெல்லிப்பளை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, சத்திர சிகிச்சை கூடம் , பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (இ),சாவகச்சேரி , ஊர்காவற்றுறை, ,கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய். ,வேலணை, நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் | 3000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு. வெற்றிகரமான விலை மனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   - அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கல் சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்குத் தகைமை பெறுவதற்கு விலை மனுதாரர்கள் பகுதி 2 –பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, 572/3 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 0212223725,0212226253,0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களனூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இம்முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தமிழ் மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 21 ஒக்டோபர் 2022 ஆம் திகதிவரை 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாகச் ரூபா 1,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 25 ஆம் திகதி ஒக்டோபர் 2022 அன்று காலை 09.35 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 19 ஆம் திகதி ஒக்டோபர் 2022 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாகசெலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் அலுவலககாசாளரிடம் அல்லது வங்கியில் செலுத்தி அவ்வாவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ்விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

021-222-3725, 021-222-6253,
021-221-4966
தொலைநகல்: 021-222-9971
மின்னஞ்சல்: rdhsjaffna15@gmail .com

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள்**
**பணிப்பாளர் பணிமனை**
**யாழ்ப்பாணம்**

## மரண அறிவித்தல்



**திரு. நடராஜா ஜெயராசா**

25/1 அம்பலவாணர் வீதி, அத்தியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திரு. நடராஜா ஜெயராசா அவர்கள் நேற்று முன்தினம் (10.10.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:** **077 959 9527** (CS 470 74)(3/6) **தகவல்:** **குடும்பத்தினர்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 07 . 1997



மறைவு 23 . 09 . 2021

**அமரர் முத்துலிங்கம் பிரகாஷ்**

ஆண்டொன்றானாலென்ன பிரகாஷ்
எம் ஆயுள் உள்ளவரை அழியாது உன் நினைவு.
விதியின் விளையாட்டில் – நீ
விடைபெற்று சென்றாயோ
நெஞ்சமதில் உன் நினைவு – பிரகாஷ்,
நிதம் எம்மை வாட்டுதடா
நிலையில்லா வாழ்வில் மரணம்
நிச்சயம் ஆனதடா – அதுபோல்
உன் நினைவுகள் என்றும் – எம்
நெஞ்சில் நிரந்தரமானதடா

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**கைதடி தென்கிழக்கு, கைதடி.** **குடும்பத்தினர்.**

## நினைவுப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 07 - 09 - 1948



விண்ணில் 13 - 09 - 2022

**கண் வைத்திய நிபுணர்**
**சரவணமுத்து குகதாசன்**

**பிரார்த்தனை வைபவம் 13.10.2022 முற்பகல் 11.00 மணி**
**இடம் சிவபூமி பாடசாலை மண்டபம், கோண்டாவில்**

எங்கள் அன்புத்தெய்வத்தின் பிரிவு செய்தியறிந்து. இறுதி வைபவத்தில் கலந்து கொண்டு ஆறுதல்கள் கூறியவர்கள் மற்றும் தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும். யாழ். போதனா வைத்தியசாலை சமூகத்தினருக்கும் நன்றி தெரிவிப்பதோடு. அன்னாரின் நினைவுப்பிராத்தனை வைபவத்திலும். தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**திருமதி கலைவாணி குகதாசன் மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**சகோதரங்கள்.**
**கோண்டாவில்.** (CS 47073) (3/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவு

இவ்வுலகில் 05 - 07 - 1940

இறையுலகில் 05 - 10 - 2020



## திருமதி கமலம்மா பொன்னம்பலம்

கண்ணை இழந்திருந்தால்
காலம் செய் விதியென்போம்
பொன்னை இழந்திருந்தால்
போகட்டும் என்றிருப்போம்
உன்னை இழந்திருந்த
இவ் உலகத்தில் வாழ்வதென்றால்
என்னென்று ஆகுமம்மா
ஏனம்மா எமைப் பிரிந்தாய்.

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

(CS 21146) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 12 - 12 - 1963

இறப்பு 23 - 09 - 2021



## ஆனந்தன் இராசதேவி

திதி : திருதியை (12.10.2022 புதன்கிழமை)

ஆணிவேராய் எம்மை காத்துகின்ற எங்கள் குடும்பத்தின்
குலவிளக்கே ஆண்டு ஒன்றாகியும் ஆறவில்லை எம் மனம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உன் நினைவுகள்
எம்மை விட்டு அழியாது

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.


என்றும் உன் நினைவுகளுடன்.
**குடும்பத்தினர்**

(CR 38260) (3/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 06 - 09 - 1958

இறப்பு 06 - 10 - 2022



## தம்பித்துரை வசீகரன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்வே - ஒஸ்லோவை வதிவிடமாகவும் கொண்ட தம்பித்துரை வசீகரன் கடந்த (06.10.2022) வியாழக்கிழமை நோர்வே - ஒஸ்லோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை (மிருக வைத்தியர்) – தனலட்சுமி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - கோணேஸ்வரி தம்பதியினரின் மூத்த மருமகமகனும், கலாமதியின் அன்புக்கணவரும் லக்சாயினியின் அன்புத்தந்தையும், குணதேவி (அளவெட்டி), அகல்யா (ஜேர்மனி), காலஞ்சென்ற தயாளன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், முருகையா (அளவெட்டி), காலஞ்சென்ற குகன் (ஜேர்மனி), திவாகரன் (இலங்கை), சிவமதி (மொன்றியல்), சசிகரன் (மொன்றியல்) மற்றும் காலஞ்சென்றவர்களான புஷ்பகோமதி, இந்துமதி, சிவகரன், ஹரிகரன், வளர்மதி ஆகியோரின் மைத்துனரும், அமீனா (விஜி), சூரியகுமார் மற்றும் சுசீலா ஆகியோரின் ச்கலனும், மணிமாறன் (அளவெட்டி), ஹிந்துஜன் (ஒஸ்லோ), சிந்துஜா (திருகோணமலை), வினோஜன் (திருகோணமலை), வினோத் (ஜேர்மனி), அஜித்தா (ஜேர்மனி) சவிதா (ஜேர்மனி), சேரலாதன் (மொன்றியல்) மற்றும் கயல்விழி (மொன்றியல்) ஆகியோரின் ஆசைமாமாவும், சுபீஸ் (மொன்றியல்), நித்தீஸ் (மொன்றியல்) மற்றும் மயூரி (அளவெட்டி), சதீஷ் (ஜேர்மனி) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (12.10.2022) பதன்கிழமை நோர்வேயில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முருகையா மணிமாறன்**
**077 048 3815**

**தகவல் : குடும்பத்தினர்**
**அளவெட்டி**

(CS 21186) (3/6)

# மரண அறிவித்தல்



## திருமதி யூலியட் வசந்தாதேவி மனோகரதாசன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட யூலியட் வசந்தாதேவி மனோகரதாசன் நேற்று முன்தினம் (10.10.2022) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாட்டீன் செல்லையா - றெஜினா தம்பதிகளின் அன்பு மக்ளும், காலஞ்சென்ற பொன்னையா - அன்னம்மா தம்பதிகளின் மருமகளும், மனோகரதாசனின் அன்பு மனைவியும், சிந்துஷா, சஞ்ஜெய், ஷைனி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயந்தி, டார்வின் ஆகியோரின் அன்பு மாமியாரும், அலோசியஸ், பாலா, பற்றிக் செல்லையா, சாந்திலா, நிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், எழில், ஸ்ரெவின், எட்றிக், சான்றா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் (15.10.2022) சனிக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று CACM சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி,**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

**021 225 5059**

**தகவல் : குடும்பத்தினர்**

(CS 21182) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80 தொன் இழுவைக் கப்பலை கொள்வனவு செய்கின்றது அரசு

கொழும்பு, ஒக். 12

இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்கு 80 தொன் கொள்ளளவு கொண்ட இழுவைக் கப்பலை கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொழும்புதுறைமுகத்தில் தற்போது சிறந்த நிலையில் தொழிற்படும் 7 இழுவைக் கப்பல்கள் இருப்பதுடன், எதிர்காலத் தொழிற்பாடுகளுக்காக 80 தொன் கொள்ளளவு கொண்ட மேலுமொரு இழுவைக் கப்பல் கொள்வனவு செய்யப்படவேண்டுமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, சர்வதேச விலைமனுக் கோரல் செயன்முறையைக் கடைப்பிடித்து இழுவைக் கப்பலை கொள்வனவு செய்வதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ-ம)

## வல்வெட்டித்துறையில்

# பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடையோர் கைது!

## பல இலட்சம் பெறுமதியான தங்கம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 11 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் உருக்கப்பட்ட தங்கம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் 25 மற்றும் 30 வயதுடையவர்கள். அவர்கள் கம்பர்மலை மற்றும் உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர்களிடம் இருந்து பருத்தித்துறை நகைக்கடை ஒன்றில் திருடப்பட்ட நகைகள் உருக்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் ஒருவர் திருட்டுக்களில் ஈடுபட்டார் என்றும் மற்றையவர் அந்த நகைகளை அடகுவைக்க உதவினார் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (அ-ம-26)

### அர்ஜுன்...

கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு இடம்பெற்று வருகின்றது. நேற்று இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றன.

2015ஆம் ஆண்டு மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி குறித்து தாக்கல் செய்யப்பட்ட முதலாவது பிணைமுறி மோசடி வழக்கின் பொதுச் சொத்துச் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டில் இருந்து, பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் தம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டைப் பேண முடியாது என்று பிரதிவாதிகள் தரப்பால் சமர்ப்பிக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபணையை நீதிபதிகள் குழாம் ஏற்றுக் கொண்டதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சஞ்சீவ மொராயஸ், தமித் தொட்டவத்த மற்றும் நாமல் பலேல்ல ஆகிய மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாமின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையான நீதிபதிகளின் உடன்பாட்டின் பேரில் இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

பொதுச் சொத்துச் சட்டத்தின்கீழ், ஒரு நிறுவனத்துக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படமுடியாது என்றும் பேர்பேச்சுவல் ட்ரேஷரீஸ் லிமிட்டெட் ஒரு நிறுவனம் என்றும் குறிப்பிட்டு நீதிமன்றில் ஆரம்ப ஆட்சேபணையை ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பண தாக்கல் செய்திருந்தார். அதன் அடிப்படையில், பொதுச்சொத்து சட்டத்தின்கீழ் பிரதிவாதிகளுக்கு சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை நீக்கும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும், பொதுச்சொத்து சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை தவிர ஏனைய குற்றச்சாட்டுக்கள் எதிர்வரும் டிசெம்பர் 16ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தப்படும் என்று நீதிபதிகள் குழாம் அறிவித்தது.

2015ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி இடம்பெற்ற பிணைமுறி ஏலத்தில் சுமார் 688 மில்லியன் ரூபா நிதி இழப்பு ஏற்பட்டமைக்கு அர்ஜுன் மஹேந்திரன் பொறுப்பாக இருந்தார் என்றும் அவருக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக 23 குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபரால் கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றில் அதிகுற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், அதன் முன்னாள் பிரதி ஆளுநர் பத்தினிகே சமரசிறி, பேர்பேச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டெட், அதன் பணிப்பாளர்களான அர்ஜுன் அலோசியஸ், ஜெப்ரி அலோசியஸ், நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன உள்ளிட்ட பத்து பேருக்கு எதிராக பொதுச் சொத்து சட்டத்தின்கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கின் முதலாவது பிரதிவாதியான மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூரிலும், 10 ஆவது பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டுள்ள பேர்பேச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் அஜஹான் கார்டி புஞ்சிஹேவா மலேசியாவிலும் வசிப்பதால் அவர்கள் இன்றி வழக்கு விசாரணையை முன்னெடுக்க கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### போதைப்பொருளுடன்...

சந்தேக நபர்களிடம் இருந்து 1 கிராம் ஹெரோய்னும் 20 கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது. 31 வயதுடைய பெண்ணொருவரும், 18, 19 வயதுடைய இரு இளைஞர்களுமே சந்தேக நபர்களாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

### ஹெரோய்னுடன்...

இடமான முறையில் நடமாடிய நபரொருவரைச் சோதனைக்கு உட்படுத்தியதிலேயே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டார். கைதானவரிடம் இருந்து ஒரு கிராம் 400 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளதுடன் அவரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-125)

### போதை...

டன் 'குகா' என்று அறியப்படும் நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கோப்பாய் - செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேகநபரே கைதுசெய்யப்பட்டவராவார். அவரிடம் பொலிஸார் மேலதிகவிசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-125)

### சிகிச்சை...

மாயனூர் பகுதியில் வசித்துவந்த குறித்த நபர் மீது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமாக தாக்குதலை அடுத்து அவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சைகளில் எந்த முன்னேற்றமும் இல்லாத நிலையில் அவர் மீண்டும் கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையிலேயே சிகிச்சை பயனளிக்காமல் அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். (அ-ம-113)

### நவாலியில்...

கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

காணியின் உரிமையாளர் உழவு இயந்திரம் மூலம் காணியை உழுது துப்புரவுக்கு உட்படுத்திய நிலையிலேயே இரண்டு பைகளுக்குள் இருந்து மேற்படி வெடிகுண்டுகள் அவதானிக்கப்பட்டன.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. வெடிகுண்டுகளை மீட்டு அவற்றைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர். மேலும் சில வெடிகுண்டுகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அந்தப் பகுதியில் சிறப்புத் தேடுதல் நடவடிக்கை விசேட அதிரடிப்படையின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-27-125)

### எரிவாயுவின்...

துள்ளது.

இதன்படி 12.5 கிலோகிராம் எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 500 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 5 ஆயிரத்து 300 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 200 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 2 ஆயிரத்து 120 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. லிட்ரோ நிறுவனம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை கடந்தவாரம் குறைத்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### இளைஞர்...

ஞன் மீதே இந்தக் கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த மூவரே இரண்டு வாள்களால் குறித்த தாக்குதலை நடத்தியுள்ளனர். இதையடுத்து குறித்த இளைஞர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

### ஆனந்தபுரம்...

உள்ள காணியொன்றிலிருந்தே மேற்படி மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. குறித்த மனித எச்சங்கள் மீதான தடயவியல் பரிசோதனை நாளை முன்னெடுக்கப்படவுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-19)

### உடனடி...

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் மேலும் உள்ளதாவது:-

உலகளாவிய நெருக்கடிகள் காரணமாக இலங்கை உட்பட 54 நாடுகள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த நாடுகளுக்கு உடனடியாக கடன் நிவாரணம் தேவைப்படுகின்றது. பலமூன்றாம் உலக நாடுகள் மிகவேகமாக தீவிரமடையும் கடன்நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. உரிய நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் இந்த நாடுகள் மிகமிக மோசமான விளைவைச் சந்திக்கும்.

உடனடி கடன் நிவாரணம் இல்லாத பட்சத்தில் 54 நாடுகளில் வறுமைநிலை அதிகரிக்கலாம். காலநிலையைத் தழுவுதல், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தணிப்பது போன்ற விடயங்களில் இந்த நாடுகளுக்கு உடனடி முதலீடுகள் தேவைப்படுகின்றன. பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய நாடுகளும் உள்ளன.

இந்த நாடுகள் எதிர்கொண்டுள்ள ஆபத்துத் தொடர்பில் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுக்கப்படுகின்ற போதிலும், இதுவரை சிறிதளவு நடவடிக்கைகள் கூட எடுக்கப்படவில்லை. ஆபத்துக்கள் அதிகரிக்கின்றன. இந்த நெருக்கடி தீவிரமடைந்து உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில் ஒரு வேரூன்றிய வளர்ச்சி நெருக்கடியாக பரவும் ஆபத்துள்ளது. வறிய கடனாளி நாடுகள் ஒன்றிணைந்து பெரும் பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்கின்றன - என்றுள்ளது. (அ-ம)

### வீதியால்...

சங்கிலிகள் உட்பட சுமார் எட்டுப் பவுண் நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்று சில நேரத்தின் பின்னர் வல்லை வெளியால் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண்ணொருவரை தட்டி வீழ்த்திவிட்டு அவரிடம் இருந்து ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலி மற்றும் ஒரு பெறுமதியான அலைபேசி என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பந்தாட்டத்தில் வளர்மதி சம்பியன்





யாழ்., ஒக். 12
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் அமரர் சிவகுருநாதன் நினைவாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் வளர்மதி அணி சம்பியனானது.

இளவாலையில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் ஆவரங்கால் இந்து அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியது.

5 சுற்றுக்களைக் கொண்ட ஆட்டத்தில் 3:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது வளர்மதி அணி. விருந்திரனராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் வெற்றிபெற்ற அணிகளுக்கு கிண்ணங்களை வழங்கினார். (அ-ம)



அமெரிக்க லொத்தர் இலவச விசா
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
Passport அவசியமில்லை
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
V2 Travels
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்
0768226244

## இலவச அமெரிக்க லொத்தர் விசா

2024 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
நிரந்தர குடியேற்றத்திற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்.
(18 வயதிற்கு மேற்பட்டோர் தனியாக விண்ணப்பிக்கலாம்.)
2002 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுவரும் இச் சேவையினூடாக 1000க்கும் அதிகமானோர் அமெரிக்கா சென்றுள்ளனர். இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாது உங்கள் அதிஷ்டத்தை தட்டிச் செல்லுங்கள்.
தொடர்புகளுக்கு : 0777554528
திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிடெட்
321, K.K.S.Road, Jaffna.

## விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை
5-7 நாட்களுக்குள் விழங்கப்படுகின்றன

Lanka Cargo
Worldwide Express
315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 076 283 2397

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
✓ 4 பரப்பாகவும். 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
✓ தரகர் தேவையில்லை.
✓ A-09 வீதி முகப்புடன் காணி உள்ளது.
தொடர்பு: 077 8748 135
077 4082 649

## விற்பனைக்கு
பெண் ஒருவரின் தனிப்பாவனையில் நல்ல நிலையில் உள்ள DIO Bike விற்பனைக்கு உண்டு. மு.ப 10.00 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். நிறம் : சிவப்பு வெள்ளை.
076 123 8091

## கல்வி
தரம் 9,10,11,O/L கடந்த கால வினாத்தாள் கணித வகுப்புகள் மற்றும் இணைந்த கணிதம். பௌதீக வகுப்புகள் வீட்டில் வந்து பேராதனை பொறியியல் பட்டதாரிகளால் தெல்லிப்பளை. சுன்னாகம். இணுவில். கொக்குவில் மற்றும் யாழ்ப்பாணம். கிளிநொச்சி போன்ற பகுதிகளில் சொல்லித் தரப்படும்.
தொடர்பு : 077 377 2690

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும். 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்
- பார்வையிடும் நேரம்: காலை 06.00 - மாலை 6.00

077 911 6983 /076 755 8606


## மரண அறிவித்தல்

தோற்றம் : 28 : 12 : 1943



மறைவு : 11 : 10 : 2022

### வேலுப்பிள்ளை பரமேஸ்வரன்
**(ஓய்வுபெற்ற நில அளவையாளர் மகாவலி அதிகார சபை)**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர் மகாவலி அதிகார சபை) நேற்று (11.10.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும், கஜகரன் (ஆசிரியர். யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி). சசிகரன் (பொறியியலாளர் MAGA Engineering Pvt, Ltd). தனுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். Dr.உர்மிளாவின் (வைத்தியர். பொது வைத்தியசாலை திருகோணமலை) பாசமிகு மாமனாரும். ஷர்ஜனா. டக்ஷின்யா ஆகியோரின் அன்புப் பேரனும். காலஞ்சென்றவர்களான இரத்தினேஸ்வரி. பரமேஸ்வரி. கமலநாயகி. பேரின்பராணி மற்றும் மகாலிங்கம். சண்முகலிங்கம். நவநீதமணி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2022) புதன்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 6159 632, 077 8550 449

(CS 21196) 1/6


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை
**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- ஜெயம்
077 8147 389
077 9865 457




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.